தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 67 மலர் 5

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2023

துணர் : 66　　பிரமோதூத — ஆனி　　மலர் : 3

ஜூன் — ஜூலை 1992

உள்ளுறை　　　　பக்கம்

1. தமிழர் நல்வாழ்வும் —
தமிழ் வழிக் கல்வியும் 98
பேராசிரியர் பி. விருத்தாசலம்

2. அறிவியலில் மொழி ஆதிக்கம் 108
த. புகழேந்தி

3. நூல் மதிப்புரை 112
ய. மணிகண்டன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)
4. பூமணியின் இரண்டு நாவல்கள் ... 115
டாக்டர் இரா. சண்முகவேலன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
5. ஒப்பில் வழியாற் பொருள் செய்குந ... 123
செ. வை. சண்முகம்

6. வ. ஐ. ச. ஜெயபாலன் கவிதைகளில்
கூட்டுக் குரல் 129
தெ. திருஞானமூர்த்தி

7. திருக்குறள் கூறும் செய்ந்நன்றி
அறிதல் — ஓர் ஆய்வு III 142
ஆ. இரத்தினம்

பதிப்பாசிரியர்: பேராசிரியர் ச. பாலசுந்தரம்

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ்.டி.காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
முன்னாள் செயலாளர், தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறை, சென்னை.

,, சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி., பி.எல்., பிஎச்.டி
முன்னாள்இயக்குநர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்சென்னை.

,, முனைவர்சி.பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட், பிஎச்.டி.
துணை வேந்தர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பி எச். டி.,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.
'ஏரகம்' 4/384 சதாசிவநகர், வண்டியூர்வழி, மதுரை-625020

,, முனைவர் மு. கோவிந்தராசன்
பேராசிரியர், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மா. இராமலிங்கம், எம். ஏ., பி எச். டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்

,, தமிழ்த்தொண்டர். கோ.முத்துப்பிள்ளை, பி.ஏ.,
முன்னாள் அரசு இணைச் செயலாளர், சென்னை.

,, முனைவர் ஈரோடு தமிழன்பன், எம். ஏ., பி எச்.டி.,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி, சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர். செ. இராசு எம். ஏ.,
இணைப்பேராசிரியர், கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சை.

,, புலவர் ஆ. பாலன், எம்.ஏ., எம். ஃபில்.,
துணைமுதல்வர்.த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., பி. எட்.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவர மேனிலைப்பள்ளி

,, முனைவர் பா. மதிவாணன், எம்.ஏ., எம். ஃபில்., பிஎச்.டி.,
தமிழ் விரிவுரையாளர், த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

தமிழர் நல்வாழ்வும் — தமிழ் வழிக் கல்வியும்

பேராசிரியர் பி. விருத்தாசலம்,
முதல்வர்,
தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி,
தஞ்சாவூர்.

உலகத்தில் உள்ள பெரும்பாலான நாடுகளில் — குறிப்பாக அயல்நாட்டவருக்கு அடிமைப்படாமல் — தம்மைத்தாமே ஆண்டு கொள்ளும் தன்னுரிமை பெற்ற நாடுகளில் — அந்தந்த மண்ணுக்குரிய மொழிகளிலேயே — தாய்மொழிகளிலேயே கல்வி கற்பிக்கப் பெறுகிறது. விடுதலை பெறாமல் அயல்நாட்டவருக்கு அடிமைப் பட்டிருக்கும் நாடுகளில்தான் அயல்நாட்டு மொழிகள் ஆட்சிமொழியாகவும், பயிற்றுமொழியாகவும் இருக்கின்றன. இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமானால் எந்த நாட்டில் தாய்மொழி அல்லாத வேறு ஒரு மொழியில் கல்வி கற்பிக்கப்படுகிறதோ, அந்த நாடு ஓர் அடிமை நாடு என்று துணிந்து கூறலாம்.

சனநாயகம் என்று சொல்லப்பெறும் மக்கள் ஆட்சி நடைபெறும் நாடுகளில் பெரும்பான்மையோர் எடுக்கும் முடிவுகளுக்குச் சிறுபான்மையோரும் கட்டுப்பட்டு இணங்கி நடக்க வேண்டும். சிறுபான்மையோர் மொழியைப் பெரும்பான்மையோர் மீது திணிக்கும் நாடு கொடுங்கோல் ஆட்சி நடக்கும் சர்வாதிகார நாடாகவே இருக்கமுடியும். அந்த முறையில் பார்த்தால், ஒரு நாட்டில் பெரும்பான்மையோராக வாழும் மக்களின் தாய்மொழியே பயிற்றுமொழியாக இருக்கவேண்டும். அதுதான் மக்கள் ஆட்சிக்கு உரிய இலக்கணமாகும்.

ஒரு நாட்டில் பெரும்பான்மை இனத்தவராக இல்லாமல் பல சிறுபான்மை இனத்தவர் வாழக்கூடும். அந்தச் சிறுபான்மை இனத்தவரும் ஒரு கணிசமான அளவில் ஒரு பகுதியில் வாழ்ந்தால் அவர்களுக்கும், அவர்களுடைய தாய்மொழியிலேயே கல்வி கற்பிக்க வேண்டும். அதுவே சமுதாய நீதியாகும். ஆனால், அவ்வாறு தம் தாய்மொழியில் கல்வி கற்கும் வாய்ப்பும் உரிமையும் வழங்கப் பெற்ற சிறுபான்மையோர் பெரும்பான்மை இனத்தவரின் மொழியை ஓரளவுக்கேனும் படித்தாக வேண்டியது இயற்கையின் விதியாகும்

[illegible] த்தாச[illegible] கலைக் [illegible] கழகத்தில் தேசியக் கல்விக்கொள்கை பற்றி [illegible] 19[illegible] இல் நடைபெற்ற கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரை

அந்த அடிப்படையைக் கொண்டு பார்த்தால், தமிழ்நாட்டில் குடியிருந்துகொண்டு — தமிழ்நாட்டுச் சோறு தின்று — தமிழ் நாட்டுத் தண்ணீர் குடித்து தமிழ்நாட்டில் வீசும் காற்றை உயிர்த்து, உயிர் வாழ்வோர் யாராக இருந்தாலும் — அவர்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழராக இருந்தாலும் வேறு மொழிகளைத் தம் தாய்மொழியாகக் கொண்ட மொழிச் சிறுபான்மையினராக இருந்தாலும் — அவர்கள் இந்த நாட்டில் உயிர் வாழ்வதற்கு நன்றிக் கடனுக்காகவாவது தமிழைப் படிக்க வேண்டும் தமிழ்ப் பயிற்றுமொழியில் படிக்கவேண்டும் என்பது என் விருப்பம் ஆகும் இதுவே இந்தியாவில் உள்ள மாநிலங்கள் அனைத்திலும் நடைமுறையாக இருக்கவேண்டும் அப்போது தான் இந்த நாட்டில் எல்லாரும் சரிநிகர் சமானமாக —ஒற்றுமையாக வாழமுடியும்.

வீடு கட்டும்போது ஐந்தாறு அடிமுதல் பத்து அடிவரையில் மண்ணைத் தோண்டி கருங்கல் சல்லியைக் கொண்டு கடைக் கால் போட்டு — அடித்தளம் அமைத்துக் தரைமட்டம் வரையில் சுவரெழுப்பிய ஒருவன், அந்த அடித்தளச் சுவர்மீது கல்லையும், சாந்தையும் கொண்டு சுவரினைத் தொடர்ந்து எழுப்பி வீட்டைக் கட்டி முடிக்க வேண்டும். அவ்வாறு செய்வதுதான் அறிவுடைமை ஆகும். அதற்கு மாறாகப் பத்தடி ஆழத்தில் அடித்தளம் போட்டுச் சுவரெழுப்பித் தரைமட்டம்வரையில் வந்தபிறகு, அதன் மீது வீடு கட்டாமல் — அதை அப்படியே விட்டுவிட்டு – அதற்குப் பக்கத்தில் வெறுந்தரையில் — அடித்தளம் போடாமல் — மண்ணுக்கு மேலே சேற்றைக் குழைத்து வைத்துக் கருங் கல்லைக் கொண்டு சுவரெழுப்பினால் அந்தச் சுவர் நிற்குமா? அந்தவீடு நிலைக்குமா? அவ்வாறு அடித்தளம் போடாது வீடுகட்ட முயல்வோரை அறிவற்ற மூடர்கள் என்று உலகம் பழிக்கும்.

ஒரு குழந்தை தாயின் வயிற்றில் கருவாக உருவாகி இந்த உலகில் பிறந்த நாள் முதல் ஐந்து வயது வரையில் மிகுதியான அறிவைப் பெற்றுக்கொள்கிறது என்றும், அவ்வாறு ஐந்து வயது வரையில் தான் குழந்தையாக இருக்கும்போது பெறுகின்ற அறிவுக்கு ஈடாக, வாழ்க்கையின் வேறு எந்தக்கால கட்டத் திலும் ஒரு மனிதன் அறிவுபெற முடிவதில்லை என்றும் அறிவியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

அபிமன்யு தன் தாய் வயிற்றில் கருவாக இருந்தபோதே, தன் தாய் சுபத்திரையிடம் போர் அணிவகுப்பை அமைப்பது பற்றியும், அந்த அணிவகுப்ப உடைப்பது பற்றியும் கண்ணன் கூறிய செய்திகளைத் தெரிந்து கொண்டான் என்று மகாபாரதம் கூறுகிறது. ஒரு குழந்தை ஐந்து வயது வரையில் தன் தாயிடமும், தந்தையிடமும் அக்கம் பக்கத்தில் குடியிருப் போரிடமும், உற்றார் உறவினரிடமும் தன் தாய்மொழி வாயிலாகவே செய்திகளைத் தெரிந்து கொள்கிறது ; அறிவினைப் பெறுகின்றது. இவ்வாறு தன் தாய்மொழி வாயிலாக ஐந்து வயது வரையில் கல்விகற்ற ஒரு குழந்தைக்குத் தொடர்ந்து அதன் தாய்மொழியில் கல்வி கற்பித்தால்தானே அதன் அறிவு பெருகும் ; அதற்குத் தேவையான கல்விவீடு கட்டி முடிக்கப் பெறும். அப்படிச் செய்யாமல், ஐந்து வயது வரையில் அந்தக் குழந்தை கல்விகற்ற தாய் மொழியைப் புறக்கணித்து அயல்மொழி ஒன்றில் கல்வி கற்பிப்பது என்பது முன்னாள் கூறியதுபோல் மண்தரை மேலே மாளிகை கட்ட முனையும் மூடர்கள் செயலே ஆகும்.

தாய்மொழிக் கல்வி தாய்ப்பால் போன்றதாகும். தாய்ப்பால் என்பது தூய்மையானது ; கலப்படம் இல்லாதது ; நலம் தருவது; வலிவு தருவது என்பது மட்டும் அன்று ;மிகவும் மலிவானதுமாகும். சிற்றூர்களில் வாழ்கின்ற தாய்மார்களுக்குத் தங்கள் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் தருவது என்பது ஒரு காசும் செலவில்லாத எளிய செயலாகும். அமுல், அமுல் ஸ்பிரே முதலிய புட்டிப் பால்களை வாங்கிக் கொடுப்பது என்பது கட்டுப்படி ஆகாதது ஆகும். தாயில்லாத குழந்தைகளுக்குப் புட்டிப்பால் வாங்கிக் கொடுக்கலாம். தாயுள்ள குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுப்பதுதான் தாய்க்கும் நல்லது, சேய்க்கும் நல்லது. தாய்ப்பால் பெருகுமாறு தாய்க்குச் சத்துணவு வாங்கிக் கொடுத்தலே நாம் செய்ய வேண்டுவதாகும். தாய்க்குச் சத்துணவு தராமல் அவளைப் பட்டினி போட்டுக் கொன்றுவிட்டுக் குழந்தைக்குப் புட்டிப்பால் வாங்கிக் கொடுப்பது அறிவற்ற செயலாகும். ஆகவே, குழந்தைகளுக்குத் தாய்மொழியில் கல்வி கற்பிக்கவேண்டும். கலைகள் அனைத்தையும் — அறிவியல் அனைத்தையும் தாய்மொழியில் கற்பிக்கும் வகையில் அந்தத் தாய்மொழியை வளர்த்தாக வேண்டும். இதுவே அறிவுடையார் செயலாகும். தாய்மொழியை வளர்க்காமல் அதனைச் சாகவிட்டு அயல்மொழியில் கல்வி கற்பிப்பது செலவு மிகுந்த — இடர்ப்பாடு மிகுந்த அறிவற்ற செயலாகும்.

இப்போது தமிழ் நாட்டில் உள்ள நிலைமை என்ன ?

1] மருத்துவக் கல்வியும், பொறியியல் கல்வியும் ஆங்கிலத்தில் மட்டுமே கற்பிக்கப்படுகின்றன.

2] எம். ஏ., எம். எஃசி முதலிய பட்ட மேற்படிப்புக்கள் ஆங்கிலத்தில் மட்டுமே கற்பிக்கப்படுகின்றன.

3] பி. ஏ., பி எஃசி, பி. காம் முதலிய பட்டப்படிப்புக்களும் பெரும்பாலான தனியார் கல்லூரிகளில் ஆங்கிலத்தில் மட்டுமே கற்பிக்கப்படுகின்றன. அரசு கல்லூரிகளில் மட்டும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளும் பயிற்று மொழிகளாக உள்ளன. தெளிவாகச் சொல்வதானால் கலை, அறிவியல் கல்லூரிகளில் 90% மாணவர்கள் ஆங்கில வாயிலாகவும், 10% மாணவர்கள் தமிழ் வாயிலாகவும் பயில்கின்றனர்.

4] மேனிலைப் பள்ளிகளையும், உயர்நிலைப் பள்ளிகளையும் பொருத்தவரையில் 90% மாணவர்கள் தமிழிலும். 10% மாண வர்கள் ஆங்கிலத்திலும் கல்வி பயில்கின்றனர்.

5] தொடக்கப் பள்ளிகளைப் பொருத்த வரையில் மாநக ராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தும் பள்ளி களில் மட்டுமன்றி, அரசு மான்யம் பெறும் தனியார் தொடக்கப் பள்ளிகளிலும் தமிழே பயிற்று மொழியாக இருக்கின்றது. இவ்வகைப் பள்ளிகள் தமிழ்நாட்டில் 35000 உள்ளன.

6] அரசு மானியம் பெறாமல் தனியார் நடத்தும் நர்சரிப் பள்ளிகளிலும் தொடக்கப்பள்ளிகளிலும் ஆங்கிலம் வாயிலாகவே கல்வி கற்பிக்கப்படுகிறது. இத்தகைய பள்ளிகள் ஏறத்தாழ 50,000 இருக்கலாம்.

7] அரசு மானியம் பெறாத சுயநிதிக் கல்லூரிகள் அனைத் திலும் ஆங்கிலமே பயிற்று மொழியாக உள்ளது.

இவற்றில் எந்த மாற்றத்தையும் கொண்டுவர இன்றைய தமிழக அரசு விரும்புவதாகத் தெரியவில்லை. மேலும், ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பதுபோல் உயர் நிலைப் பள்ளிகளிலும், மேனிலைப் பள்ளிகளிலும் ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவுகளை எவ்வளவு வேண்டுமானாலும் தொடங் கிக்கொள்ளலாம் என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது இதன் விளைவாக அடுத்து வரும் பத்தாண்டுகளில் நிலைமை தலை கீழாக மாறும். உயர்நிலைப் பள்ளிகளிலும், மேனிலைப் பள்ளி

களிலும் ஆங்கிலம் வழியாகப் 10% மாணவர்களும், தமிழ் வழியாகத் 90% மாணவர்களும் இப்போது படித்து வருகிறார்களே இந்த நிலைமை போய் — ஆங்கிலம் வழியாக 90% மாணவர்களும் தமிழ் வழியாகப் 10% மாணவர்களும் படிக்கும் நிலைமை உருவாகும்

இவ்வாறு, நம் தமிழ்நாட்டில் தமிழ் பயிற்றுமொழியாக இல்லாமல், ஆங்கிலம் பயிற்று மொழியாக இருப்பதால் அதுவும் மழலையர் பள்ளிகளிலேயே ஆங்கிலம் பயிற்றுமொழி ஆவதால், விளையக்கூடிய பெருங் கேடுகளை எண்ணிப் பார்க்கும்போது என் நெஞ்சம் மிக நடுங்குகிறது பெரிய பெரிய வெட்டறு வாள்களைக் கொண்டு, காளிதேவிக்கும், மாரியம்மனுக்கும் ஆயிரக் கணக்கான ஆடுகளையும், மாடுகளையும், கோழிகளையும் பலியிடு கின்ற கொடுமைகளை நான் இளமையில் பார்த்தும் கேட்டும் நெஞ்சு நடுங்கியதுண்டு அதுபோல, இப்போது என் கண் ணெதிரே கல்வி அறிவு என்னும் காளிதேவிக்கு—ஆங்கிலக் கல்வி நிறுவனங்களாகிய பலிபீடங்களில், ஆங்கிலம் என்னும் வெட்டறு வாளைக்கொண்டு, படித்த ஆசிரியர்களாகிய கோயில் பூசாரிகள் என்னுடைய செந்தமிழ்த் திருநாட்டுச் சிறு குழந்தைகளாகிய கிளிகளையும் புறாக்களையும், புள்ளிமான் கன்றுகளையும் இளைஞர் களாகிய ஆடுகளையும் பலியிடுகின்ற கொடுமையைக் கண்டு என் நெஞ்சம் குமுறுகிறது.

நம் நாட்டில் தாய்மொழி வாயிலாகத்தான் கல்வி கற்பிக்க வேண்டும் என்று நம் தேசத்தந்தை மகாத்துமா காந்தி அடிகளும் நோபல் பரிசு பெற்ற வங்கக் கவிஞர் இரவீந்திரநாத தாகூரும் சொன்னார்கள். அதை இந்த நாடு கேட்கவில்லையே! மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தாய்மொழி வழியே கல்வி கற்பிக்காத தேசத்தைப் பற்றிக் கூறுவன பின்வருமாறு :—

“தேச பாஷையின் மூலமாகப் பயிற்றப்படாத கல்விக்குத்
தேசியக் கல்வி என்ற பெயர் சொலலுதல் சிறிதளவும்
பொருந்தாது போய்விடும் அன்றோ”

“தேசியக் கல்வி கற்றுக்கொடுக்காத தேசத்தைத் தேசம் என்று சொல்லுதல் தகாது. அது மனிதப் பிசாசுகள் கூடிவாழும் விஸ்தாரமான சுடுகாடேயாகும்”.

மேலும், அவர் ஆங்கிலம் வழியே கல்வி கற்பிக்கும் நிறுவனங் களில் தாம் சேர்ந்து கல்வி பயின்றதால் தமக்கு ஏற்பட்ட கொடுந்

துன்பங்களைப்பற்றி இரண்டு கவிதைகளைப் பாடியுள்ளார். அவை பின்வருமாறு :—

"ஐயரென்றும் துரையென்றும் மற்றெனக்கு
ஆங்கிலக் கலையென்று ஒன்று உணர்த்திய
பொய்யருக்கிது கூறுவன், கேட்பிரால்
பொழுதெல்லாம் உங்கள் பாடத்தில் போக்கி நான்
மெய்யயர்ந்து, விழிகுழி வெய்திட,
வீறிழந்தென துள்ளம் நொய்தாகிட,
ஐயம் விஞ்சிச் சுதந்திரம் நீங்கியென்
அறிவு, வாரித் துரும்பென்று அலைந்ததால்"

"செலவு தந்தைக்கோர் ஆயிரஞ் சென்றது ;
தீதெனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன ;
நலமோர் எட்டுணையும் கண்டிலேன் ; இதை
நாற்பதினாயிரம் கோயிலிற் சொல்லுவேன்"

இவ்வாறு பாரதி கதறி அழுவதைக் கேட்டால் கல்லும் கரையுமே, பேயும் இறங்குமே, அறிஞர்களே உங்கள் மனம் இரங்காதா ? என்று கேட்கத் தோன்றுகிறது.

ஆங்கிலக் கல்வி என்பது மனப்பாடக்கல்வி அது மாணவர்கள் பாடங்களை முழுமையாகப் புரிந்துகொண்டு சிந்தனை செய்வதற்குத் துணை செய்யாது. மாணவர்கள் தேர்வுக்கு வரும் என்று சில வினாக்களை எதிர்பார்த்து அந்த வினாக்களுக்குரிய விடைகளை மட்டும் பொருள் தெரியாமல் மனப்பாடம் செய்வது, எதிர்பார்த்தப்படியே அந்த வினாக்கள் தேர்வில் வினாவப் பெற்றால் உரிய விடைகளை எழுதி முதல் வகுப்பில் தேர்ச்சி பெறுவது, எதிர் பார்த்த வினாக்கள் வராவிடில் தேர்வில் தோல்வி அடைவது என்பதுதான் இந்த நாட்டில் தொடர்ந்து நடந்து வருகிறது. இந்தக் கட்டுரையாளனாகிய என் வரலாறே, இதற்கொரு சான்று. நான் பூண்டியில் உள்ள வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரியில் 1957-58 இல், பல்கலைக்கழக முன்னிலை வகுப்பு (PUC) படித்தேன். 1958 ஏப்பிரலில் நடைபெற்ற தேர்வில் முதற்பகுதி ஆங்கிலம், இரண்டாம் பகுதி தமிழ் இரண்டிலும் தேர்ச்சி பெற்றேன். மூன்றாம் பகுதியில் இருந்த நான்கு துறைப் பாடங்களில் கணக்கு சிறப்புத் தமிழ், அறிவியல் ஆகிய மூன்று பாடங்களில் தேர்ச்சி பெற்றேன். நான்காம துறைப் பாடமாகிய அளவை இயலில் (Logic) தேர்ச்சி பெறவில்லை. அப்போது இருந்த பல்கலைக்கழக விதிமுறை

களின்படி ஒருதுறைப் பாடத்தில் தேர்ச்சி பெறாவிட்டால், நான்கு துறைப் பாடங்களிலும் மீண்டும் தேர்வு எழுதவேண்டும். அதன்படி 1958 செப்டம்பரில் மீண்டும் நான்கு பாடங்களையும் எழுதித் தேர்ச்சி பெற்றேன் இந்த செப்டம்பர் தேர்வில் அளவை இயலில் எனக்கு (A grade) 60% க்கு மேல் மதிப்பெண் கிடைத்தது. ஏப்பிரல் தேர்வில் நான் தோல்வி அடைந்த போதும் அளவை இயலில் எனக்கு ஒன்றும் தெரியாது. செப்டம்பர் தேர்வில் 60%க்கு மேல் மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெற்ற போதும் அந்தப்பாடத்தில் என்ன இருந்தது என்பதை நான் அறியேன். தேர்வில் வரும் என்று நான் எதிர்பார்த்த சில வினாக்களுக்குப் பொருள் தெரியாமலேயே விடைகளை மனப்பாடம் செய்திருந்தேன். ஏப்பிரல் தேர்வில் நான் எதிர் பார்த்த வினாக்கள் வரவில்லை. அதனால் நான் தேர்வில் தோற்றேன். செப்டம்பர் தேர்வில் நான் எதிர்பார்த்த வினாக்கள் வந்தன. அதனால் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றேன். அவ்வளவே.

என்னைப் போலவே பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இருப்பது எனக்குத் தெரியும். பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திருமிகு. பேராசிரியர் முத்துக்குமரன் அவர்கள் அடிக்கடி சொல்வது போல் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் இணைவு பெற்று நடந்துவரும் கல்லூரிகளில் ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவில் படிக்கும் மாணவர்களில் ஒரு கணிசமான எண்ணிக்கையினர் தேர்வில் தமிழில் விடையெழுதுகிறார்கள். சில மாணவர்கள் ஒரு வினாவுக்கு ஆங்லலத்திலும், இரண்டாம் வுனாவுக்குத் தமிழிலும், மூன்றாம் வினாவுக்குப் பாதி ஆங்கிளத் திலும், பாதி தமிழிலும விடையெழுதுகிறார்கள், விசித்திரமான இந்த நிலைமைக்குக் காரணம் என்ன ?

நான் முதல்வராகப் பணிபுரியும் தமிழவேள் உமாமகேசு வரனார் கரந்தைக் கலைக் கல்லூரியில் இந்தக் கல்வி ஆண்டில் (1990 - 91) பி. லிட்., பட்டப் படிப்பில் எழுபத்தொன்பது (79) மாணவ, மாணவியர் சேர்ந்துள்ளனர். அவர்களில் ஏறத்தாழ அறுபது பேர்கள் பன்னிரண்டாம் வகுப்புத் (+2) தேர்வில் ஆங்கிலத்தில் தோல்வி அடைந்து, இரண்டாம் முறை அல்லது மூன்றாம் முறை, அல்லது நான்காம் முறை தேர்வெழுதி வெற்றி பெற்றவர்கள். தமிழக அரசு நடத்தும் பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்புப் பொடத் தேர்வுகளில் தேர்ச்சி பெறாத மாணவ மாணவியரில் ஏறத்தாழ 80% மாணவர்கள் ஆங்கிலத்தில் மட்டும் போதிய மதிப்பெண் பெறாமல் தோல்வி அடைந்தவர்

களாகவே இருக்கின்றனர். அவ்வளவு ஏன், உலகப் புகழ்பெற்ற மாபெரும் கவிதை மேதையாகிய இராமானுசம் பதினோராம் வகுப்புத் தேர்வில் ஆங்கிலத்தில் தேர்ச்சிபெற முடியாமல் தோல்வி அடைந்தவர் என்றால், அயல் மொழியாகிய ஆங்கிலம் நம் நாட்டு மாணவர்களை என்ன பாடுபடுத்துகின்றது என்பதை நாம் நன்குணரலாம் அல்லவா ?

பள்ளிகளில் முதல் வகுப்பில் சேரும் குழந்தைகளில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியினரே, அரசு நடத்தும் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வை எழுதும் அளவுக்குத் தொடர்ந்து படிக்கின்றனர். மூன்றில் இரண்டு பங்கினர் தொடர்ந்து படிக்க முடியாமல் போவதற்கு வறுமை ஒரு காரணம் என்றால், இந்த அயல் மொழியாகிய ஆங்கிலத்தைப் படிக்க முடியாமல் இடர்ப்படுவதும் ஒரு முக்கிய காரணமாகும்,

ஐ ஏ. எஸ்., ஐ. பி. எஸ்., ஐ. எப். எஸ்., முதலிய அனைத்திந்தியத் தேர்வுகளில் அண்மைக் காலத்தில் தமிழ்நாட்டு மாணவர்களில் ஐந்தாறுபேர்கூடத் தேர்ச்சி பெற முடியவில்லை. அதற்குக் காரணம் என்ன? வடநாட்டு மாணவர்கள் தாய்மொழியாகிய இந்தியில் படித்து, இந்தியில் தேர்வெழுதி வெற்றி பெறுகிறார்கள்.

நம் தமிழ்நாட்டு மாணவர்களோ எம். ஏ., எம். எஃசி முதலிய பட்ட மேற்படிப்புக்களை அயல் மொழியாகிய ஆங்கிலத்தில் படித்து, ஆங்கிலத்தில் தேர்வெழுதுகிறார்கள். அதனால் தோற்றுப் போகிறார்கள், எந்தக் காலத்திலும் தாய்மொழியில் படிப்பவனுடன் அயல் மொழியில் படிப்பவன் போட்டி போட்டு வெற்றி பெற முடியாது, காலில் கருங்கல் பாறையைக் கட்டிக் கொண்டிருப்பவன் வெறுங்காலுடன் நிற்பவனுடன் போட்டி போட்டு ஓட முடியுமா ? ஆங்கிலம் என்னும் கருங்கல் பாறையைக் காலினும், கழுத்திலும் கட்டிச் சுமக்கும் தமிழர்களால், எளிதாகத் தாய்மொழியில் சுமையெதுவுமின்றிப் படிக்கும் வடமாநிலத்து மாணவர்களுடன் போட்டியிட்டு வெல்ல முடியாது என்பது ஒருதலை. ஆகவே, தமிழர்கள் கல்வியில் மேலோங்க வேண்டுமானால், தமிழ்நாட்டு மாணவர்களுடைய ஆங்கிலச் சுமையை உடனே அகற்ற வேண்டும். அதற்குரிய வழிவகைகள் பின் வருமாறு :—

கலை, அறிவியல், தொழில், பொருளாதாரம் முதலியவற்றில் மிகவும் முன்னேறியுள்ள ஐரோப்பிய நாடுகளில் முதல் ஐந்து வகுப்புக்களில் தாய் மொழியில் மட்டுமே பாடங்கள் கற்பிக்கப் பெறுகின்றன. ஆறாம் வகுப்பில்தான் இரண்டாம் மொழி ஒன்று கற்றுத்தரப்படுகின்றது. அதுபோலவே, நம் நாட்டிலும் 1961 வரை ஆறாம் வகுப்பில்தான ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது. சில ஆண்டு களுக்கு முன்பு மூன்றாம் வகுப்பில் கற்பிக்கத் தொடங்கினார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு (1988இல்) முதல் வகுப்பிலேயே ஆங்கிலம் கற்பிக்க முயற்சிகள் செய்யப் பெற்றுத் தற்காலிகமாக அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கேடுகளுக்கெல்லாம் பெருங் கேடாகப் பால்மணம் மாறாப் பச்சிளங் குழந்தைகள் பயிலும் மழலையர் பள்ளிகளில் (நர்சரி பள்ளிகளில்) எல், கே. ஜி., யூ. கே. ஜி, வகுப்புக்களிலேயே ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. இந்த நிலை மிகவும் வருந்தத்தக்கது; கேடானது. தமிழ் நாட்டிலேயே தமிழையும், தமிழினத்தையும் அழித்து நாசமாக்கக் கூடியது

1) ஆகவே, மழலையர் பள்ளியில் தாய்மொழியில் மட்டுமே கல்வி கற்பிக்க வேண்டும். ஆறாம் வகுப்பிலிருந்துதான் ஆங்கிலம் கற்பிக்க வேண்டும்.

2) உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உள்ள ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவுகள் தமிழ்ப் பயிற்றுமொழிப் பிரிவு களாக மாற்றப்பெற வேணடும்.

3) எம்.ஏ., எம்.எஸ்சி., முதலிய பட்ட மேற்படிப்பு வகுப்புக் களிலும் பொறியியல், மருத்துவம், வேளாண்மை முதலிய தொழிற் கல்லூரிகளிலும் (Professional College) தமிழே பயிற்றுமொழியாக வேண்டும்.

4) பத்தாம் வகுப்பிலும், பன்னிரண்டாம் வகுப்பிலும் கல்லூரி களிலும் ஆங்கிலத்தில் 35% மதிப்பெண் பெற்றால்தான் தேர்ச்சி பெற முடியும் என்று விதியுள்ளது. அது சிற்றூர்களில் வாழும் நாட்டுப்புறத்து மாணவர்களைப் பெரிதும் பாதிக்கிறது. ஆகவே, ஆங்கிலத்தில் 35% மதிப்பெண் பெறவேண்டும் என்னும் விதியை நீக்கித் தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் சேர்த்து 70 மதிப்பெண் பெற்றால் போதும் என்று அறிவிக்கவேண்டும்.

5) அரசு அலுவலகங்களிலும், பல்கலைக் கழகங்களிலும், நீதிமன்றங்களிலும, வங்கிகளிலும் தமிழே அலுவலக மொழியாக இருத்தல் வேண்டும். அந்த அலுவலகங்களில் பணிபுரிய அலு வலர்களையும், ஊழியர்களையும் தேர்ந்தெடுப்பதற்குத் தமிழில்

மட்டுமே தேர்வுகளை நடத்தவேண்டும். ஒருவருடைய ஆங்கிலப் புலமையைக் கண்டறியத் தேர்வுகளை நடத்தக் கூடாது ஆங்கிலப்புலமை கட்டாயம் தேவை என்று கருதப்படும் மொழி பெயர்ப்புத்துறைபோன்ற துறைகளில் ஆங்கிலத்தில் பி ஏ.,எம்.ஏ., பட்டம் பெற்றவர்களைப் பணியில் அமர்த்தலாம்.

6) பல்வேறு உலகமொழிகளிலும், வெளியாகும் நூல்களையும் பருவ இதழ்களையும் (Journals) உடனுக்குடன் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடுவதற்குப் பெரிய அளவில் நிலையான ஏற்பாடு களைச் செய்யவேண்டும்.

சுருங்கச் சொன்னால் வெளி மாநிலங்களிலும் அயல் நாடு களிலும் போய் வேலை பார்ப்பதற்காக ஆங்கிலத்தில் படிக்க வேண்டியுள்ளது என்னும் மாயையை அகற்றவேண்டும். சொந்த நாட்டை — சொந்த மக்களை நம்பி — அந்தந்த மண்ணுக்குரிய மொழிகளிலேயே – தாய் மொழி ளிலேயே — தமிழ் நாட்டில் தமிழிலேயே கல்வி கற்பித்து மாணவரின் அறிவையும், சிந்தனை ஆற்றலையும் வளர்ப்பதுதான் கல்வியாளர்களும், அரசாளுவோர் களும் செய்யவேண்டிய முதற்கடமை என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

—[நன்றி]—

அறிவியலில் மொழி ஆதிக்கம்.

த. புகழேந்தி,
ஆய்வாளர், அறிவியல் தமிழ்த்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சை - 613 005.

கருத்து மொழியின் வாயிலாகவே வெளிப்பட முடியும் — அரசியலிலும், அறிவிலிலும், பிற ஆற்றல்களிலும், வல்லரசாய்த் திகழும் மக்களின் மொழி 'உலகப் பொதுமை' என்ற போர்வையில் அறிவியல் கருத்துகளிலும் ஆதிக்கம் செய்ய முயல்கின்றது. ஆதிக்கத்திற்கு ஆட்படுவோர் அழிகின்றனர்; ஆட்படாதோர் வளர்கின்றனர். ஆதிக்கம் மட்டுமே அழிவிற்குக் காரணம் என்பது இக்கட்டுரையின் கருத்தன்று. அதுவும் ஒரு காரணம் என்பதே இங்கு அறிவுறுத்த விரும்புவது.

பழக்கம் :

பழகுதற்கேற்ப ஒன்றுடன் நெருக்கமும், இடைவெளியும் ஏற்படும். ஒன்றாய்ப் பிறந்து, ஒன்றாய் வளர்கையில் அதிக நெருக்கமும், இடையில் இணைகையில் இடைவெளி இட்ட நெருக்கமும் இயைதல் இயற்கை. இவ்வகையில் அறிவியலில் காணப்பெறும், கையாளப்பெறும் மொழிக் குறியீடுகளுக்கு ஏற்ப, அம்மொழியினருக்கு நெருக்கமும் பிற, மொழியினருக்கு இடைவெளியும் இயல்பாகின்றது.

எழுத்துப் பழக்கம் :

'Iron' என்ற ஆங்கிலச் சொல்லுக்கும், அப்பொருளின் வேதியியல் குறியீடான 'Fe' என்பதற்கும் எந்நெருங்கிய உறவும் இல்லை. இதே போன்றே 'Sodium' என்ற சொல்லுக்கும் அதற்குரிய குறியீடான 'Na' என்பதற்கும் எவ்வுறவும் இல்லை. இதனால் இவ்விரு குறியீடுகளையும், அதற்குரிய பொருள்களையும் தொடர்புறுத்தி நினைவில் நிறுத்த, தமிழன் ஒருவனும், ஆங்கிலேயன் ஒருவனும் நிகரான முயற்சியை மேற்கொள்ளவேண்டுவது போன்று வெளிப்பார்வைக்குத் தெரியும். ஆயின் F, N, e, a என்ற தனித்தனி எழுத்துகள் ஆங்கிலேயனின் பிறப்போடும், சூழலோடும் நாளும் உறவாடுவதால், பழகிய இரண்டின் கூட்டுச் சேர்க்கையாக ஆங்கிலேயனுக்கு நெருக்கமாகத் தமிழனுக்கோ இடைவெளியுடைத்தாகின்றது. இவ்வகையில், தனிப்பட்ட மொழிக் குறியீடுகளாக இல்லாதிருப்பவற்றின் நிலையினையும் ஆராய்தல் வேண்டும்.

பொருட்புலப்பாடு :

Alpha, Beta என்பனவற்றுக்கு உரிய குறியீடுகளில் ஆங்கில மொழிக் குறியீடுகள் கையாளப்பெறாது, எம்மொழியையும் சாராப் பொதுக்குறியீடுகள் கையாளப் பெற்றுள்ளன. ஆயின், அவற்றை ஆங்கிலப் பெயர்களால் அழைத்தலே உலகப் பொதுமை எனப் புகழப்பெறுகின்றது. இவ்வகையில் குறியீடுகள் உலகப்பொதுமையை உண்மையாய்ப் பெற்றிருக்க, அவற்றின் பெயர்களிலோ ஆங்கிலம் ஆதிக்கம் செய்கின்றது. இவ்வாதிக்கத்திற்கான காரணத்தைக் காணல் வேண்டும்.

சொற்பொருட்குறியீடு :

Alpha — ஆங்கில நெடுங்கணக்கில் முதலெழுத்து A
— அணுப்பிளவில் முதலில் தோன்றும் கதிர்கள் Alpha கதிர்கள்.

Beta — ஆங்கில நெடுங்கணக்கில் இரண்டாமெழுத்து B அணுப்பிளவில் இரண்டாவது தோன்றும் கதிர்கள் Beta கதிர்கள்.

(தனிப்பட்ட மொழிக்கூறு அக்குறியீடுகளில் இல்லைபோல் தோன்றினாலும் உற்றுநோக்கின் எவ்வகையிலாவது சார்பு தெரியும்)

இவ்வகையில் இவை காரணப் பெயர்களாக ஆங்கிலேயனது நினைவில் பசுமரத்தாணிபோல் பதிவாகத், தமிழனுக்கோ இடுகுறியாகி Alpha என்ற பெயரையும், அதற்குரிய குறியீட்டையும், அக்கதிர் தோன்றும் தன்மையையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய முயற்சிக்கடுமை எழுகின்றது. அம்முயற்சியைப் பிறவற்றுக்குப் பயன்படுத்தும் வழி நிகரான அறிவுத்திறனுள்ள ஆங்கிலேயன் முன்னேற வாய்ப்பு ஏற்படுகின்றது.

பொருளை எளிதாக நினைவில் நிறுத்த, சொல் பயன் செய்கின்றது. சொல்லையும், பொருளையும் மேலும் எளிதாக நினைவில் கொள்ள சுருக்கக் குறியீடு உதவி செய்கின்றது. எனவே குறியீட்டைக் கண்டவுடன், அதற்குரிய சொற்பொருள் நினைவுக்கு வரவேண்டும். முன் அறியாச் சொற்பொருளையும் ஓரளவு உய்த்துணரத் தக்கதாகவாவது குறியீடு அமைந்திருக்க வேண்டும். அவ்வாறு அமைந்துள்ளதா? யாருக்கு ஏற்ப அமைந்துள்ளது?

Oxygen = O
Hydrogen = H
Carbon = C

இவ்வகையில் Oxygen என்றவுடன் அதன் முதலெழுத்தான 'O' அதற்குரிய சுருக்கக் குறியீடாகவும் 'O' என்றவுடன் அது Oxygen-ஐத்தான் குறிக்கலாம் என்ற உயத்துணர்தலும் ஆங்கிலேயனுக்கு வாய்ப்பாகின்றன. ஆயின், தமிழனுக்கோ,

ஆக்ஸிஜன் = O
ஹைட்ரஜன் = H
கார்பன் = C

எனச் சொல்லிற்கும், சுருக்கக் குறியீட்டிற்கும் தொடர்பற்றுச் சொல், சுருக்கக் குறியீடு ஆகிய இரண்டினையுமே நினைவில் கொள்ள வேண்டிய இக்கட்டு எழுகின்றது. இதேபோன்றே,

எலக்ட்ரான் நிறை = m^e = mass of the electron
புரோட்டான் நிறை = m^p = mass of the proton
எலக்ட்ரான் ஆரம் = r^e = radius of the electron

என உலகப் பொதுமைக் குறியீடுகளாகத் திகழ்பவை ஆங்கிலேயனுக்கு எளிமையாகப் பொருளைப் புலப்படுத்த, தமிழனுக்கோ பொருளைப் புலப்படுத்தாதோடு, நினைவுக்கான முயற்சிக் கடுமையையும் ஏற்படுத்துகின்றன.

இவ்வகையில் ஒரு மொழியினருக்கு எளிமையையும், மறு மொழியினருக்குக் கடுமையையும் ஏற்படுத்தும் ஒன்று ஒருபோதும் உலகப்பொதுமை ஆகாது; ஆகக் கூடாது. இதற்கு உலகப் பொதுமையாம், அறிவியலில் தனிப்பட்ட மொழியாம் ஆங்கிலத்தின் ஆதிக்கமே காரணமாகும். இந்த ஆதிக்கத்தால், ஆங்கிலேய இடை மாணாக்கனின் அறிவு முன்னேற்றத்தையே தமிழகத் தலைமாணாக்கன் எட்ட இயலும். இந்நிலையில் தமிழகக் கடை மாணாக்கனின் முன்னேற்ற நிலை வெளிப்படை. இதற்கான தீர்வுதான் என்ன ?

தீர்வு :

ஊரோடு ஒத்துப்போதல் வேறு; தனித்தன்மை இழந்து அடிமையாதல்வேறு. இரண்டாவததனையே தமிழர் முதலாவதென

நினைத்துக்கொண்டு ஒழுகுகின்றனர். இதனால், உலகப் பொதுமையுடைய அறிவியலில் தனிப்பட்ட மொழி, ஆதிக்கத்தை இவர்களே இருகரம் இணைத்து வரவேற்கின்றனர். இது தொடரின் என்றுமே ஆங்கிலேயத் தலை மாணாக்கனின் அறிவு முன்னேற்றத்தைத் தொடவும் முடியா நிலை ஏற்பட வாய்ப் பாகும். எனவே இனித் தனிப்பட்ட மொழி ஆதிக்கத்தை என்றும், எள்ளளவும், எவ்வகையிலும் அனுமதிக்கவே கூடாது. ஆதிக்கம் — விலகிவிடாது; விலக்கவேண்டும். நெருக்குதல் இல்லாவரை இது முடியாது.

ஆதிக்கத்திற்கு அடிமையாகாது ஒவ்வொருவர்தம் மொழியும் அறிவியலை ஆதிக்கம் செய்யத் தொடங்கவேண்டும். அவரவர்தம் மொழி ஒத்த தனித்தன்மையும் அறிவியல் திறனும் எய்துகையில், +, — போன்று உலகப் பொதுமைக் குறியீடுகள் எம்மொழிச் சார்பும் அற்று, உலகப் பொதுமை வேண்டி, வேறு வழி யின்றிப் புனையப்பெறும். எனவே அனைத்து அறிவியல் துறைக் குறியீடுகளும், இம்மண்ணின் மைந்தர்களால் கண்டு பிடிக்கப்படுவனவும் தாய்மொழிக் குறியீடுகளாலேயே உலக அறிவியலில் அரங்கேற்றப் பெறவேண்டும். உண்மையான உலகப் பொதுமை காணும் வரை இது தொடரவேண்டும். அப்பொழுது தான், தமிழகத் தலைமாணாக்கன் ஆங்கிலேயத் தலை மாணாக்கனுக்கு நிகராக முடியும். முயற்சியால் தமிழகக் கடை மாணாக்கன் இடை மாணாக்க நிலைக்காவது வளர இயலும்.

ஓர் அடிக்கே தடுமாறும் தமிழினத்திற்கு ஒன்பது அடித் தீர்வா என்ற ஐயம் எவர்க்கும் எழுதல் இயற்கை. ஓர் அடிக் குறிக்கோளாயின் கால் அடியே முன்னேற முடியும். ஒன்பதாவது அடியைக் குறிக்கோளாய்க் கொள்ளின் பத்தாவது அடிக்கே வழி புலனாகும். ஏனெனில், பட்டறிவுகளே பாடங்களாகின்றன. இன்று இயலக் கூடியதை மட்டும் எண்ணாமல், நாளை முடியக் கூடியதையும் இன்றே அறிந்திருத்தல் இன்றியமையாமை.

நூல் மதிப்புரை

ய. மணிகண்டன்,
தமிழ்ப் பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சை

நூல்: நிலாக்கால நினைவுகள், ஆசிரியர்: கு. வெ. பால சுப்பிரமணியன், வெளியீடு: உமா பதிப்பகம், 26, திருவள்ளுவர் நகர், கும்பகோணம். முதற்பதிப்பு: 1990, விலை ரூ12-00.

புலமை வளமும், கவித்துவ நலமும், கைகோத்து நடமிடும், நவில்தொறும் நயம்பல நல்கும் கவிதைத்தொகுப்பு நூலாகும் இது.

இன்று வையத்தை—மனித இனத்தைச் சூழ்ந்துள்ள துன்பங் களையும், தீமைகளையும் கண்டு, கவலைகொண்டு கசியும் ஒரு கவிதை உள்ளத்தின் அக்கறையார்ந்த சிந்தனைகளையும், அறச்சினத்தையும், நாளை உலகிற்கு வழிகாட்டும் வாக்கையும், இளைய தலைமுறையைத் தூக்கத்திலிருந்து எழுப்பி உயர்வுச் சிகரத்தை அடைய உசுப்பி விடுகின்ற வரிகளையும் கொண்ட தாக இந்நூல் அமைந்திருக்கின்றது.

இந்நூலில் பேரளவுக்கு மரபு வடிவங்களிலான கவிதைகளும், இறுதியில் சில வசன அமைப்பிலான கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. நேரிசைவெண்பா, அறுசீர் ஆசிரிய விருத்தம், எண்சீர் ஆசிரிய விருத்தம், அகவல் ஆகிய மரபு வடிவங்களில் கவிதைகள் செழுமையாக வார்க்கப்பெற்றுள்ளன.

இந்நூலில் பல்வேறு தலைப்புகளில் பல்வேறு பாடுபொருள் களில் கவிதைகள் காணப்படுகின்றன. பல்வேறு தலைப்புகள்—பல்வேறு வடிவங்கள்—பல்வேறு பாடுபொருள்களில் கவிதைகள் காணப்படுகின்ற போதிலும் இவை அனைத்தின் அடிநாதமும் ஒன்றே! 'மானுடத்தை மேம்படுத்தல்' என்பதே அது. கவிஞர் கு. வெ. பா. அவர்களின் பரந்த மனிதநேயத்தையும், உயர்ந்த சிந்தனை வீச்சையும், ஆழ்ந்த புலமை வளத்தையும், கனிந்த கவித்துவ ஓட்டத்தையும் வெளிப்படுத்துவனவாக இந்நூலின் கவிதைகள் யாவும் விளங்குகின்றன.

தமிழின் சிறப்பு, வளர்ச்சி, காதல், காதலில் தோய்ந்த நிலாக்கால நினைவுகள், காதல் எனும் பெயரில் இன்று நடக்கும் கூத்துகளைக் கண்டித்தல், மதுவால் விளையும் துன்பத்தைப் படம் பிடித்தல், காவிரி நீர்ச்சிக்கல், மனைவியைப் பிரிந்து

பரத்தையை நாடிய வள்ளல் பேகனைக் கபிலபரணர் திருத்திய நிகழ்ச்சி, இயற்கை எழில்—ஈடுபாடு, தலைவர்களும் அறிஞர்களும் கவிஞர்களுமான காந்தியடிகள், பெரியார், அண்ணா, கலைஞர், பாரதி, பாரதிதாசன், பாவாணர் ஆகியோரைப் போற்றல், தாழ்த்தப்பட்டோர்க்கு இழைக்கப்படும் கொடுமைகளை, இனவெறி—நிறவெறியால் கறுப்பர் இனத்துக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எடுத்துக்காட்டி எதிர்ப்புக் குரல்கள் கொடுத்தல் என்று இந்நூலின் கவிதைகளின் பாடு பொருள் தமிழ்—தமிழகம் தொட்டு, இந்தியத்தில் தோய்ந்து, வையம் தழுவி வளர்ந்து சிறக்கின்றன.

தெளிந்த ஆற்றொழுக்கான நடை, எளிய இனிய உவம உருவகங்களின் காட்சி, சங்க இலக்கியச் செறிவை –தாக்கத்தை நினைவு கூரும் சொல்—தொடர் ஆட்சி, கட்டுகோப்பான யாப்பமைதி முதலியன இக்கவிதைத் தொகுப்பை அழகுத் தமிழின் அணிவகுப்பாக்கியுள்ளன. முத்தமிழ்ப்பரப்பு முழுவதும் மூழ்கித்திளைத்துப் பெற்ற புலமைவளம் கவிஞர் கு. வெ. பாலசுப்பிரமணியம் அவர்களிடம் ஏராளம் இருப்பதனை இந்த நூலின் பாடல் அடிகள் அனைத்தும் பகர்ந்து நிற்கின்றன.

‘இது ஒன்றும் கவிதையல்ல’ என்று சொல்லித்தொடங்கும் வசனகவிதைகள் கூட ஒருவகை ஓசையழகு அமையக் கவித்துவம் கனல அதர்மத்தின் மீதான ஆவேசம் ஆர்ப்பரிக்கச் சிறந்த கவிதைகளாக விளங்குகின்றன. இவ்வசன கவிதைகளை நோக்கும்போது கவிஞர் கு. வெ. பொ. அவர்களை மரபுக் கவிதை மட்டுமல்லாமல் “வசனகவிதையும் கைவந்த வல்லாளர்” என்று அழைக்கத் தோன்றுகின்றது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள காதற்பாடல்கள் மென்மையும், தன்மையும் மேவப்பெற்றுப் படிப்பவர் நெஞ்சில் தேனில் ஊறிய பலாச்சுளைகளாகத் தீஞ்சுவை பயக்கின்றன.

தாழ்த்தப்பட்டோர்க்கு இழைக்கப்பட்டு வருகின்ற கொடுமைகளைக் குறிப்பிட்டு,

“வெண்மணியில் விழுப்புரத்தில் குடிசை வேக
வெளியேதான் நிற்கின்றான் நந்தன் இன்னும்”

(ப. 43)

என்று கவிஞர் பாடும்போது, நாகரிக எல்லைக்கு அப்பால் மானுடம் நிற்பது கண்முன் காட்சியளித்து நெஞ்சை வருத்துகின்றது.

நிறவெறிக்கு எதிராகக் கவிஞர்,

“ விழிக்கருப்பைத் துடைக்ககிலார்; வெளுத்த கூந்தல்
முதுமையினை விலக்ககிலார் ; நிலங்க கரிக்குப்
பழியொன்றும் சொல்லகிலார் ; கறுப்பு மேகப்
பயனொன்றும் மறுக்ககிலார் ; மனிதர் கொண்ட
வெளிக்கருப்பை மட்டுமிங்கே வெறுப்ப தேனோ ? ”

(ப. 46)

என்று நெற்றிக்கண்ணைத் திறப்பது ; கொடுமைகள் அற்ற ஒரு புதிய குவலயத்திற்கு வாயில் திறப்பதாக அமைகின்றது.

நாம் சுமந்துகொண்டிருக்கும் விலங்குகளை சுட்டிக்காட்டிக் கவிஞர்,

“ ஒரு விலங்கை உடைத்த பின்னர்
உருவான விலங்குகள்தாம் எத்தனை எத்தனை ?
சாதி விலங்குகள் சமய விலங்குகள்
ஆதியிலே இல்லாத ஆயிரமாம் விலங்குகள் ” (ப.90)

என்று பாடும்போது, விலங்குகளை உடைத்தெறியும் வீறு கவிதையைப் படிக்கின்ற நம் நெஞ்சில் விளைகின்றது.

இந்தநூலின் இறுதிக் கவிதையில்,

“ நானொன்றும் நம்பிக்கை இழக்கவில்லை இளைஞர்களே !

தாகூரும், ரவிவர்மாவும் தான்சேனும் சௌத்ரியும் தேகம் இழந்தாலும் திரும்ப வருவதெல்லாம் உங்கள் கைகளில் தான் இருக்கின்றது.

ஆம்.

புதிய பாரதம் உங்கள் கைகளிலன்றோ புதைந்திருக்கின்றது. ”

(ப. 93)

என்ற பாடல் வரிகளைக் காணும்போது நமக்கும் இன்றைய — நாளைய வாழ்க்கையின்மீது நம்பிக்கை வளர்கின்றது. தமிழுக்கு இது ஒரு நல்ல கவிதைத் தொகுப்பு என்னும் மகிழ்ச்சியும் பிறக்கின்றது.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பூமணியின் இரண்டு நாவல்கள்

டாக்டர் இரா சண்முகவேலன்.
தமிழ்த்துறை,
அ. வீ. வா. நி. திரு புட்பம் கல்லூரி,
பூண்டி - 613 503.

சமுதாய இலக்கியம் அது தோன்றிய அல்லது அது காட்டுகிற சமுதாயத்தினது மக்களுடைய பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் முதலானவற்றைப் பிரதிபலிக்க வேண்டும். அவ்வாறெனில், இந்நாவல் (வெக்கை) அந்தப்பணியைச் செம்மையாகச் செய்திருக்கிறது என்று குறிப்பிடலாம். காட்டாக, கீழூர் மாடசாமி கோயில் விழாவினைக் கூறலாம் (பக். 157 – 160)

இறுதியாக, வெக்கை, நிலவுடைமையாளரைக் கொலை செய்துவிட்டுத் தலைமறைவாகித்திரிந்த சிறுவனுடைய எட்டு நாட்களினது (திங்கள்—திங்கள்) அனுபவங்களின் விவரிப்பாகும். இடைவெளியின் மூலம் இயல் பிரிவினைக் குறிப்பாகக் காட்டிப் பொதுவாக நாவல் கட்டமைப்பினின்றும் விலகிப் புதுமையாய் நிற்கும் வெக்கை, இன்றைய வர்க்க இலக்கிய நாவல்களுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

2) நைவேத்யம் (1985) :

"நைவேத்யத்த சாமிக்கு முன்னால நீட்டி தின்னும் தின்னும்னு மணியாட்டி கடைசியில தின்னாத் தின்னும் தின்னாட்டாப் போரும்னு சுருட்டிண்டு வரேனாம். பள்ளிப் பையங்ககிட்ட சொல்றான்" (ப. 136)

என்று சங்கரய்யர் தன்னைப் பற்றி விமரிசித்த பாதாளையைக் குறித்துச் சீதையிடம் சொல்லி அங்கலாய்க்கிறார். அவருடைய பேச்சில் இடம் பெற்ற ஒரு சொல்லை— 'நைவேத்யத்தை'ப் பூமணி நாவலுக்குரிய பெயராகச் சூட்டியுள்ளார். பூமணியிடம் அரிதாகக் காணப்படுகிற ஒரு தன்மை என்னவெனில், சிறுகதைகளாயினும் சரி நாவலாயினும் சரி அவற்றில் இடம் பெறுகிற சொற்களையே தேர்ந்து அவற்றினுக்குப் பெயரிடல் ஆகும். நைவேத்யம், அந்த அரிதாம் தன்மைக்கு ஒரு சான்று.

223 பக்கங்களைக் கொண்ட இந்நாவலின் கருப்பொருள் சமூக மாற்றம் ஆகும். இயற்கையில் ஏற்படும் மாற்றம் சிந்தனையை வளர்க்கிறது. சிந்தனை வளர்ச்சி சமுதாயத்தை மாற்றுகிறது. இன்னும் சொன்னால், ஒரு பொருளின் மாற்றமும், ஓர் உயிரின் மாற்றமும் இடத்தின் தட்பவெப்பச் சூழ்நிலைகளுக்கும், காலத்தின் அளவுக்கும் கட்டுப்பட்டே அமைகின்றன / வளர்கின்றன. இவ்வுண்மையினது விளக்கப் பாடமே நைவேத்யம்.

சங்கரய்யரை முன்னிறுத்தி, அவருடைய சமூகத்தினது இயக்கத்தையும் மாற்றத்தையும் ஒரு வரலாற்றுக் கண்ணோட்டத்தில் விவரிக்கிறது இந்நாவல்.

சங்கரய்யர் சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்து ஆதரவற்றவராய் இருக்கையில், சாம்புவய்யரும் அவருடைய மனைவி பாருவும் பெற்றோர்களாகி ஆதரித்துக் கோயிலுக்குப் பூசை வைக்கும் திருப்பணித் தொண்டை / தொழிலை அவருக்கு நல்கினர்; ஒண்டிக் கட்டையாக இருந்தவரைக் குடும்பக்காரராகவும் ஆக்கினர். கோமுவோடு வாழ்ந்த கொஞ்ச காலத்தில் அவருக்கு இறைப்பணியில் ஈடுபாடும் குடும்ப வாழ்வில் மகிழ்வும் இருந்தன. அவருடைய பூசைக்கு அக்கரகாரமே திரண்டு கோயிலுக்குச் சென்று திரும்பிற்று. அவரும் சரி, அவருடைய சமூகத்தாரும் சரி சொந்த நிலங்களைக் குத்தகைக்குக் கொடுத்துக் குடியானவர்கள் கொடுக்கும் நெல்லைப் பெற்றுக் கவலை இல்லாமல் காலத்தைக் கழித்தனர். மழை பொய்த்தது. தொடர்ந்து இரண்டாண்டுகளாக மழை இல்லாமையினால் விவசாயம் இல்லை. குடி தண்ணீருக்குக் கூடத் திண்டாட்டம். இந்நிலையில் பிராமணர்களுக்கு வரவேண்டிய குத்தகை நெல்லும் வராமல் போக உயிர் வாழ்க்கைக்கு வேறு வழியின்றி நிலங்களை விற்கத் தொடங்கினர். வீடுகளை விற்றனர். சிலர் ஊர் விட்டு வெளியேறினார்கள். சிலர் சொந்த மண்ணை விட்டுப் போக மனமின்றி வறுமையில் உழன்றனர். சங்கரய்யரின் மனைவி நோய்வாய்ப்பட்டு இறந்ததும், வேறு இரண்டு கோயில்களுக்குப் (முருகன் கோயில், அய்யப்பன் கோயில்) பூசைத் தொழிலை மேற்கொண்டு நெருக்கடி நிலையை ஒருவாறு சமாளித்தார். அக்கரகாரத்தின் கட்டுக் கோப்புக் குலைந்தது வாழ்க்கைப் போராட்டத்தில் எதிர்த்து நிற்க முடியாதவர்கள் வெவ்வேறு தொழில்களில் ஈடுபடலாயினர், சொந்த வீட்டை வெளியார்க்கு வாடகைக்கு விட்டனர். அவர்களுக்குள்ளேயே வர்க்கப் போராட்டம் வேர்

விட்டுத் துளிர்த்தது. இவ்வாறு அக்கரகாரம் — பிராமணர் சமுதாயம் இயற்கையின் மாற்றத்தினால் ,மாறுதல் கண்டது. மாற்றத்தினால் விளைந்த நன்மையைப் பார்க்கிலும், தீமையே தலைதூக்கி நின்றதால் தங்களுக்குள்ளேயே வர்க்கப் பிளவுகளை உண்டாக்கி, ஒருவரோடு ஒருவர் மோதிச் சிதறியதை, சிதைந்ததை உணர்ந்து ஒன்றுபடுகின்றனர்.

கதை சொல்லும் இந்தக் கோட்டுருவத்திற்குள்ளே வர்க்க முரண்பாடுகளும் சுரண்டல்களும், சமூகக் கொடுமைகளும் வரை படங்களாகத் தீட்டப் பெற்றுள்ளன.

நிலவுடைமையாளர்களாகிய பிராமணர்கள் தத்தமது நிலங்களைக் குடியானவர்களிடம் குத்தகைக்குக் கொடுத்து, அவர்கள் தரும் பொறுப்பு நெல்லைப் பெற்று வாழ்கிறார்கள். பிராமணர்களுடைய நிலங்களெல்லாம் சித்திரம்பட்டியில் இருந்தன. அறுவடைக் காலங்களில், அவர்களுள் பெரும்பாலோர் அந்த ஊருக்கு நேரில் போய்த் தங்களுக்குச் சேர வேண்டியதைக் கணக்குப் பார்த்து முதலில் எடுத்துக் கொள்கின்றனர் எஞ்சியவற்றில் ஊர் வழமையின்படிக் கூலி கொடுத்தது போக, மீஞ்சியவையே குத்தகை விவசாயிகளுக்கு உடைமையாகின்றன/உரிமையாகின்றன.

அந்த ஊரிலேயே ஜமீன்தாரும் மகாதேவய்யரும் பெரிய நிலவுடைமையாளர்கள். ஜமீன்தாருடைய நிலங்களைப் பாதாளை பொறுப்பேற்றுப் பார்த்தான். மகாதேவய்யருடைய நிலங்களை அவரே நேரடியாகச் சாகுபடி செய்தார். சங்கரய்யர், சாம்புவய்யர், மகாலிங்கய்யர், காமுப்பாட்டி போன்றவர்களது நிலங்களைப் பொன்னூரங்கம் என்கிற தலையாரி பொறுப்பேற்றுக் குடியானவர்களிடம் கொடுத்துப் பயிரிடச் செயது, அறுவடைக் காலங்களில், அவனே பொறுப்பு நெல்லை வசூலித்து அவர்களிடம் கொடுப்பான். வேறு சிலர், அவரவர்கள் விரும்பியபடி நிலங்களைக் குத்தகைக்குக் கொடுத்தனர். எப்படியாயினும் பெரிய நிலவுடைமையாளர்களுக்கும், சிறிய நிலவுடைமையாளர்களுக்கும் இடையில் வர்க்க முரண்பாடுகளும், மோதல்களும் இருந்தன. அதே போல் பெரிய நிலவுடைமையாளர்களுக்கும் குடியானவர்களுக்கும் இடையே வர்க்க முரண்பாடுகளும், மோதல்களும் நிலவின.

அறுவடைக் காலம். பிராமணர்கள் சித்திரம்பட்டிற்குச் சென்றிருந்தார்கள். அங்குள்ள பங்களா வாசற்படிகளில் மேலும்

கீழுமாகப் பிராமணர்கள் நிறைந்திருக்க, எல்லோருக்கும் உயரத்தில் மகாதேவய்யர் பத்திரமாக உட்கார்ந்திருந்தார். அவருடைய பார்வை நிலை கொள்ளாமல் வயல் பாதைக்கும் களத்திற்குமாகப் பறவையாடியது

"அடே அந்தப் பொண்ணு ஏன் நெல்லுக்கட்ட அவ்ளோ பலமா ஆட்டிச் சொமக்கணும். நெல் கீழ உதிருமே"

என்றார். அவரது குரலைக் கேட்டு நீர்ப்பாய்ச்சி சோணமுத்து அந்தப் பெண்ணை அதட்டினான்.

"ஏம்மா அந்த ஓட்டம் ஓடற. நெல்லெல்லாம் உதுத்துட்டுப் போயி எந்தக் கருத அடிக்கிறது."

களத்துமேட்டில் கதிர்க்கட்டுச் சுமையை இறக்கிவிட்டும் பிடரியைப் பிடித்துத் திருகி வலியைக் குறைத்துக்கொண்டிருந்த ஒருவன், நீர்ப் பாய்ச்சியின் சத்தம் கேட்டுத் திரும்பினான். அவன் முகத்தில் லேசான எரிச்சல். சங்கரய்யர் சொன்னார்.

"ஓடினா பாரம் தோணாது".

மகாதேவய்யருக்குக் கோபம்.

"என்னவோய் பெரிய பாரத்தக் கண்டீர். அதுக்கோசரம் நெல் வீணால போகணுமா".

"பெரியவாளே இப்படிச் சொன்னா கொஞ்சம் வயல் வச்சிருக்கிற நாங்க என்ன பண்றது".

"எல்லாம் பூமிக்குத் தாரை வார்த்துண்டு போக வேண்டியதுதானே ... ஒமக்கென்ன எவன் எக்கேடு கெட்டாலும் பொறுப்பு, நெல்ல கணக்கா அளந்து போட்டுருவான். நான் சொந்தமா பயிர் செய்யறவன் கைப்பிடி நெல் போனாலும் நேக்குத்தான் நஷ்டம்."

(ப. 27 28)

நாவல் காட்டும் இந்தவொரு காட்சியில் வர்க்கப் போராட்டம் நேர்எதிரான வர்க்கங்களுக்கிடையில் நடைபெறுவதைப் போலப் போராடும் வர்க்கத்திற்குள்ளும் நடைபெறும் என்கிற உண்மை வெளிப்படுகிறது.

தட்ப வெட்ப நிலைகளினால் இயற்கையில் மாற்றம் பிறக்கிறது. இயற்கையில் மாற்றத்தால் பொருளாதார மாற்றம்

ஏற்படுகிறது. பொருளாதார மாற்றத்தினால் தனிமனிதன் மாறுகிறான். தனிமனிதனின் மாற்றத்தால் சமூகம் மாற்றம் அடைகிறது. சமூக மாற்றத்தினால் சமுதாயம் மாற்றம் அடைகிறது. இந்தச் சித்தாந்தத்தை இந்நாவலின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வோர் அணுவிலும் காணமுடிகிறது.

இயக்கவியலில் பொருள் முதலிடம் பெறுதல்போல், அனைத்து மாற்றங்களுக்கும் பொருளாதாரம் அடிப்படையாகின்றது. எனவே, தனிமனிதனிடம் தோன்றும் மாற்றங்களுக்கெல்லாம் அவனது பொருள் நிறைவும், குறைவும் காரணமாகும்.

மகாதேவய்யரிடம் உள்ள பொருள் குவியலால், வறட்சியினால் தாக்குண்டு பொருளாதார வீழ்ச்சியினால் சிக்கி தவித்த தனது வர்க்கத்தினரின் நிலங்களையே விலைக்கு வாங்கிச் சொத்தைப் பெருக்குகிறார். சுப்பையா போன்றவர்கள் அவரிடம் நோட்டெழுதிக் கொடுக்கிறார்கள். சங்கரய்யர் கூடத் தன் மனைவியின் உடல் நலக்கேட்டின் பொருட்டு மருத்துவம் பார்ப்பதற்காக மகாதேவய்யரிடம் பண உதவி கேட்கிறார். அவரோ அவருடைய நிலத்தைத் தன்னிடம் விற்றுவிடச் சொல்கிறார். வேறுவழியின்றிச் சங்கரய்யர் நிலத்தை அவரிடம் விற்றுவிடுகிறார். ஊர்க் கோயில் வருமானம், செலவு அவருடைய பொறுப்பில் இருந்தபடியால் கோயில் வருமானத்தைச் சுரண்டிக் கொடுக்கிறார். சங்கரய்யர் கோயிலுக்கு மின்விளக்குப் போடவேண்டிய போதும், அக்கரகாரத்துக்குக் கிணற்றைத் தோண்டிக் குடிநீர் வசதியை ஏற்படுத்தக் கூறியபொழுதும் அவர் இசையாமல் மறுதலிக்கிறார். சங்கரய்யர் சவ அடக்கத்திற்குக்கூட மானியக் கணக்கிலிருந்து எடுத்துச் செலவு செய்ய மறுக்கிறார். மகாதேவய்யரின் மாற்றத்திற்கு அவரிடம் குவிந்த அளவற்ற பொருளே காரணமாகும்.

சங்கரய்யர் மனைவியின் மருத்துவச் செலவிற்காக இருந்த நிலத்தையும் அவளுக்குத் தெரியாமல் விற்றாலும், மனைவியை அவரால் காப்பாற்ற முடியவில்லை. மனைவியின் மரணத்திற்குப் பிறகு அவர் கோயிலே வீடென்று கிடக்கிறார். கணவனின் இழப்பினால் சீதை வயல்களில் மாட்டுச் சாணி பொறுக்கிக் கூடையில் போட்டுக்கொண்டு குப்பை சேர்த்துப் பிழைக்கிறாள். அவளுடன் சங்கரய்யர் பழகுகிறார். அவள் சாணிக்கூடையில் வைத்துக்கொண்டு வரும் தரும் உணவைச் சாப்பிடுகிறார். கோயிலுக்குள்ளேயே அவளுடன் நெருங்கி உறவாடுகிறார். அவளைக் காணவில்லையென்றால் அவருக்குப் பொறுப்பதில்லை.

மகாலிங்கய்யர் பசியின் கொடுமையால் ஜமீன்தாருக்குச் சொந்தமான வாழைத்தோட்டத்தில் ஒரு சீப்பு வாழைக்காயைத் திருடுகிறார். பாதாளை அவரைப் பிடித்து மரத்தில் கட்டி வைத்து அடிக்கிறான். சாம்புவய்யர் ரத்த வாந்தி எடுத்ததை அறிந்து சங்கரய்யர், அவரை நண்டுச் சாறு குடிக்கச் சொல்லிச் சீதையின் உதவியுடன் நண்டுச் சாறையும் கொண்டு வந்து கொடுக்கிறார்; சாம்புவய்யர் குடிக்கிறார். சுப்புடு தன் குடும்பத்தை மறந்து மகாதேவய்யரின் வீட்டிலேயே குடியாகக் கிடக்கிறான்; மீனாவுடன் உறவாடுகிறான். பிறகு அவளாலேயே விரட்டப்படுகிறான். சுந்து அக்கரகாரத்தில் குடியேறிய பள்ளிக் கூடத்து ஆசிரியர்களுக்குச் சமையல் செய்து போடுகிறான். சுப்புடுவுக்குப் பொறுக்கவில்லை. சுந்துவின் வீட்டு வாசல் முன் நின்று வாய்க்கு வந்தவாறெல்லாம் வசைபாடுகிறான். சுந்து தாளமுடியாமல் அவனுடன் எதிர்க்கணை விடுகிறான். சுப்புடு, சுருட்டைமுடி வாத்தியாரையும் சுந்துவின் மகளையும் இழுத்துப் பேசக் கவனித்திருந்த வாத்தியார் வெகுண்டு வந்து சுப்புடுவின் பூணூலைப் பிடித்தறுக்கிறார்; கன்னத்தில் அடித்துக் கீழே தள்ளி அவனது நடப்புகளைச் சொல்லிவிட்டுத் திரும்பிப்போகிறார்.

தலையாரி பொன்னுரங்கம் தன் தாத்தாவும், தந்தையாரும் வேண்டி நடந்து கொண்ட முறையில் தானும் அக்கரகாரத்திற்குத் தொண்டு செய்வதையே முதல் தொழிலாகக் கருதி அக்கர காரத்துப் பிராமணர்களுக்காக உழைக்கிறான். தனது குடும்பத்தைக் கவனியாமல் இருந்த பொன்னு, சதா காலமும் அக்கரகாரத்திலேயே சுற்றிக் கொண்டிருந்தவன், அக்கரகாரத்து மனிதர்களின் ஒற்றுமைக்குலைவையும், வீடுகளை விற்று, நிலங்களை விற்று வெளியேறுவதையும் பார்த்து கிராம முன்சீப்பின் பொறுப்புள்ள பணியாளனாகிறான். அவர் குடி யேற்றிய-குடி அமர்த்திய ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் அதிக மாகத் தொடர்பு கொள்கிறான். தனது குடும்பத்தைக் காக்கும் பொறுப்புடையவராகப் பாடுபடுகிறான். ஜமீன்தாருடைய நிலங் களும் அரண்மனையும் விற்கப்படுகின்றன. பாதாளை ஜமீனி லிருந்து வெளியேறுகிறான்; தனது நடப்பிற்காக வருந்து கிறான். இவ்வாறு ஒவ்வொருவரும் மாறுகிறார்கள்; அக்கரகாரச் சூழ்நிலையும் மாறுகிறது. நந்தவனத்து மரங்கள் வெட்டப்பட்டதால் மயில்கள் குடியிருப்பு இழந்து திசை மாறித் திரிகின்றன. உணவிற்கு வழியின்றி மலத்தைத் தின்கின்றன. கண்மாயும் குளங்களும், குடிநீர்க் கிணறும் வறண்டு போகின்றன. அக்கரகாரத்தில் சில வீடுகளில் மட்டும் மின் விளக்குகள் எரிகின்றன.

ஒரு கிராமத்து அக்கரகாரப் பின்னணியில் பார்ப்பனச் சமூகம் அகவயமாகவும், புறவயமாகவும் மாறுதல் அடைந் திருப்பதை யதார்த்தமாய்ப் பிரதிபலிக்கிற நைவேத்யத்தில் சங்கரய்யர் - சீதை உறவு கற்பனாவாதத் தன்மையைக் கலப்பது போல் காணப்படுகிறது.

நிலப்பிரபுத்துவச் சமுதாயத்திற்கும் அடிமைச் சமுதாயத்திற் கும் இடையில் வர்க்க முரண்பாடுகள் இருப்பினும், அடிமைச் சமுதாயத்தின் நேர்மையும், துணிவும், உழைப்பும் நிலப்பிரபுத் துவச் சமுதாயத்தின் ஆதிக்க வரம்பைக் கட்டுப்படுத்தி, ஆட் கொண்டு விடுகிற ஒரு மாற்றத்தையும் இந்த நாவல் எடுத்துக் காட்டுகிறது. யாருக்கும் கட்டுப்படாத மகாதேவய்யர்கூடத், தலையாரி பொன்னுரங்கத்தின் பேச்சிற்கு எதிர்பேச்சுப் பேசாமல்-மோதலைத் தவிர்த்து அடங்கியும் இணங்கியும் போகிறார்; சித்திரம் பட்டிக்காரர்களிடம் ஊர்ப்பொதுப் பங்களாவை விற்று விடுவதற் காகப் பணம் வாங்குகிறார். சித்திரம்பட்டிக்காரர்கள் அக்கர காரத்திற்குள் திரண்டு வந்து அவரிடம் எழுதி வாங்கக் கூடி யிருக்கிறார்கள். தலையாரி அவர்களிடம் விசாரித்து மகாதேவய்யரிடம் கூறுகிறார்; அவர் எழுதிக்கொடுக்க மறுக்க, அவர்களிடம் வந்து பிறகு பேசிக்கொள்ளலாம் என்று கூறுகிறான். அவர்கள் மறுக்க, தலையாரி மகாதேவய்ய ரிடம் வந்து கெஞ்சிப் பணத்தை வாங்கிக் கொண்டு போகிறான். அவர்களிடம் கொடுத்து வெகுளும்போது அதிர்ந்து பேசி, அவர் களை அமைதிப்படுத்தித் திரும்பி ஊருக்குப் போகச்செய்கிறான். இன்னொரு தடவை சங்கரய்யர் நெஞ்சு வலியினால் அய்யங் கோயிலிலேயே கண்மூட, வீட்டிற்குத் தூக்கிவரப்பட்டுக் கிடத்தி யிருக்கக் கேள்வியுற்ற தலையாரி, சங்கரய்யரின் சவ அடக்கத் திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வருகிறான். இதற்குள் சாம்புவய்யரும், மகாதேவய்யரும் சண்டை போட்டு ஓய்கிறார்கள்; சாம்புவய்யரின் மகன் தந்தி கிடைத்ததும், மனைவியுடனும் பிள்ளைகளுடனும் ஊருக்கு வருகிறான். சடங்குகள் முடிகின்றன. தலையாரி பொன்னுரங்கம்,

> "என்னசாமி இது. ஒங்க பொணத்துக்கு ஊரார தூக்க வருவாக. இது நல்லால்ல. எந்திரிச்சி வாங்க. காலா காலத்துல கொண்டு போயிச் சேக்கனும் இதுக்காகச் சண்டைபோட்டுக்கிறீகளே"

என்று மகாதேவய்யரிடம் கூறுகிறான். ரெவினியூ இன்ஸ்பெக்டர் நடராஜன் நழுவியதைப் பார்த்து,

> சாமி நான் சொல்றேன்னு தப்பா நெனக்கப்புடாது. ஒரு தெருவில பிரேதத்தக் கெடத்திட்டு ஒங்க பாட்டுக்கு இருந்தா எப்படி"

என்கிறான். இவனுடைய பேச்சிற்குக் கட்டுண்டு மகாதேவய்யரும், நடராஜனும் பாடைக்குத் தோள் கொடுக்கிறார்கள். குறிப்பாக, அடிமைச் சமுதாயம் நிலப் பிரபுத்துவச் சமுதாயத்துடன் மோதாமல் அதனைத் திருத்தித் தன் வயப்படுத்தும் போராட்டத்தில் இறங்கியிருக்கிறதான மாற்றத்தைப் புகுத்துகிறது நைவேத்யம். இத்தன்மையினது இன்னொரு பக்கமே சீதை, சங்கரய்யருடன் தொடர்பு கொண்டிருந்ததாகும். அவளுடைய அக்கறையும், அன்பும் ஆதரவற்ற உயர்குடிபிறப்பாளரான சங்கரய்யரை — அவரின் சாதி ஆசாரங்களை —வீழ்த்தி மானுடச் சமத்துவத்தை — நீதியை — நெறியை அவருள் விதைத்து / வளர்ந்து மாற்றத்தைத் தோற்றுவித்திருக்கின்றன.

வர்க்க முரண்பாடுள்ள சமுதாயத்தின் மாற்றங்களைப் படம் பிடித்துக் காட்டுவதோடு நின்றுவிடாமல் சமதர்மச் சமுதாயத்தைத் தோற்றுவித்தற்குரிய மாறுதலைக் குறிப்பாய் உணர்த்துகிற — வழிகாட்டுகிற சிறந்த நாவல் நைவேத்யம் என்றால் மிகையாகாது. சமுதாய அமைப்பில் ஒற்றுமையில் வேற்றுமையையும், வேற்றுமையில் ஒற்றுமையையும் புரிந்து கொள்ள இந்நாவல் பெரிதும் பயன்படும்.

கரிசல் காட்டு மொழியின் ஆளுமையிலிருந்து விலகிச் செல்வதான பூமணியின் மாற்றத்தைக் கூட இதில் காணலாம். முடிவாக, இப்பிரபஞ்ச உலகின் தோற்றத்திற்கும், கால காலத்தின் மாற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் சடப்பொருள்களே அடிப்படைக் காரணமாக இருக்கின்றதைப் போலவே சமுதாய மக்களின் வாழ்க்கை அமைப்புக்கும், ஏற்றத் தாழ்வுக்கும் பொருளாதாரமே அடித்தளமாக உள்ளது என்கிற மார்க்சியத் தத்துவப் பாட விளக்கமே நைவேத்யம் ஆகும்.

(1) வெக்கை, படைப்பகம், சென்னை, 1982.

(2) நைவேத்யம், ரசனா புக் உறவுஸ், சென்னை, 1985.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஒப்பில் வழியாற் பொருள் செய்குந

செ. வை. சண்முகம்,
மொழியியல் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர் - 608 002.

"ஒப்பில் வழியாற் பொருள் செய்குநவற்றிற்கு இதன் பின்னதிகாரத்து உவமையியலுட் காணப்படும்"

என்ற கல்லாருடைய விளக்கம், நச்சினார்க்கினியர் கருத்தைத் தழுவியதால் பொழிப்புரைக்கும், விளக்கவுரைக்கும் முரண் ஏற்பட்டது.

பொதுவாக இந்த அடி உரிமை உருபுகளைக் குறிப்பதாகக் கொள்ளக்கூடாது என்ற தெய்வச் சிலையாரின் வாதத்தைப் பார்த்து இதன் குறைநிறைகளை விளக்குவோம்:

3.1. உவம உருபுகள் குறிப்பு வினை,

'ஒப்பில்வழி' என்பதற்கு 'ஒக்கும்' என்னும் சொல் வாராத உவமஉருபு எனப்பொருள் உரைப்பவால் எனின்'

என்ற தெய்வச் சிலையாரின் வாசகம் சேனாவரையருடைய கருத்தைப் பிரதிபலிக்கிறது. இந்தக் கருத்து பொருந்தாது என்பதற்கு உவமஉருபுகள், வினைக்குறிப்பு என்பதும் அவை வினையியலில் விவரிக்கப்பட்டு விட்டன என்பதும் அவர்தரும் வாதங்கள்:

1) 'ஒப்பினானும் பண்பினானும் என்று, அப்பாற்காலம் குறிப்பொடு தோன்றும்' (வினை 16) என்றமையாலும், 2) போல, அன்ன ஏய்ப்ப, உறழ என்பன சாத்தன் புலிபோலும் எனவும், புலி-போலப் பாய்ந்தான் எனவும், புலிபோன்ற சாத்தன் புலிபோலும் சாத்தன் எனவும், இவ்வாறு முற்றும் வினையெச்சமும், பெயரெச்சமும் ஆகி வருதலினாலும், அவையெல்லாம் வினைக் குறிப்பு என்று கொள்க'

எனபது அவரது விளக்க வாசகம்.

'ஒப்பினானும்' என்று குறிப்பு வினை சூத்திரத்தில் குறிப்பிட்டது போன்றான், போல்வான் போன்ற வினைகளை

உள்ளடக்குமா என்பது விவாதத்துக்கு உரியது. ஏனென்றால் அவை உண்மையில் நிலைவினை (Stative verb) யே தவிர குறிப்புவினை இல்லை. (முழு விளக்கத்துக்குக் குறிப்பு வினையைப் பார்க்கவும்). மேலும் உவமஉருபுகளாகச் சொன்னவைகளில் ஒட்டு, ஒன்று, ஒடுங்கு, வெல், புல் (லு) போன்றவை தெரிநிலை வினைகள் அவைகளில் செயவென் எச்ச வடிவம் மட்டுமே உவம உருபுகளாக வரும். எனவே உவமை உருபுகள் எல்லாம் குறிப்புவினை என்பது பொருந்தாது போய்விடுகிறது. மேலும் உவம உருபுகளாக வருபவைகளில் பெரும்பாலானவை (ஒப்ப, நிகர்ப்ப, தவிர) பொருள் மாற்றம் அடைந்து - அதாவது பொருள் சிதைவுபட்ட நிலையிலே உவம உருபுகளாகக் கையாளப் படுகின்றன. இதனால் அவை இலக்கண மாற்றம் - பகுபதம் பகாப்பதமாய் ஆவதோடு வினைச்சொல் இடைச்சொல்லாகவும் மாறிவிடுகின்றன. அதனாலேயே வினையெச்ச வடிவமாக இருந்தாலும் பெயர்கொண்டு முடிகிறது. மீன் ஒப்ப கண், மயில் ஏய்ப்ப கண். எனவே வெறும் வடிவ அடிப்படையில் குறிப்பு வினையென்பது தவறு; பொருள் செயல்பாடு ஆகிய இரண்டையும் சேர்த்துக் கவனித்தே சொல்லின் இலக்கணம் நிர்ணயிக்கப்பட வேண்டும். எனவே சேனாவரையரும் அவரை ஒட்டி நச்சினார்க்கினியரும் பிறரும் உவம உருபுகளை இடைச் சொல்லாகக் கொள்ளலாம் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளத் தகுந்ததே. ஆனால் உவமை உருபுகளை மட்டும் இந்த அடி குறிப்பதாகக் கொள்வது ஒருவகையில் குன்றக்கூறலாகக் கருதப் பட வேண்டும். ஒப்பில் போலியாக வரும் ஏற்று, அந்தில் போன்றவை பொருள் மாற்றமும், இலக்கண மாற்றமும் பெற்று வருவதும் இந்தப் பிரிவில் அடக்குவது இந்த அடியின் பொருளை விரிவுபடுத்துவதோடு சொற்கள் வேர்ப்பொருள் இழந்து பொருள் மாற்றமும் இலக்கண மாற்றமும் பெற்று வருபவை எல்லா வற்றையும் குறிக்கும் என்று பொதுமைபடுத்துவதே சிறப்பு உடையது.

4. மன், தின், கொல் போன்றவை

இந்தக் கருத்துக்கு உடையவர் தெய்வச்சிலையார் என்று முன்னரே குறிப்பிடப்பட்டது. இந்தக் கருத்து மாற்றம் ஆய்வுலகில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதே தவிர (சுந்தரமூர்த்தி, 1963 : 311) அதன் குறைநிறை விவாதிக்கப்படாதது ஏன் என்று தெரியவில்லை.

'பொருத்தம் இல்லாதவிடத்துப் பொருள் உணர்த்துவன என்ற தெய்வச்சிலையாருடைய பொழிப்புரையே முற்றிலும் மாறுபட்டதுதான். மேலும் விளக்கவுரையிலும் ' 'தத்தம் குறிப்பின்' என்பதற்குச் சார்ந்த சொல்லின் குறிப்பினால் எனவும், 'ஒப்பில் வழி' என்பதனை (உள்ளபடியே) ஒரு சொல்லோடு பொருத்தம் இன்றித்தனி வந்துழி 'எனவும் பொருள் அமைப்பினும் அமையும்'.

என்று விளக்கித் தத்தம் குறிப்பில் பொருள் செய்யும் இடைச்சொற்களையும் ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச் சொற்களையும் வேறுபடுத்திக் காட்டியுள்ளார். பொதுவாகப் பலபொருள் ஒரு சொல்லாக இல்லாத சொற்களின் பொருள் கூட வாக்கியச் சூழலாலும், கிளவிச் சூழலாலுமே பொருள் புரிந்து கொள்ள முடியும். இது எல்லாச் சொல்லுக்கு ஓரளவு பொருந்தும், மேலும் பொருத்தம், பொருத்தம் இல்லாதவை என்று பாடுபடுத்துவது சிறப்பானதாகக் கொள்ளமுடியாது. ஏனென்றால் ஏதோ ஒரு வகையில் பொருத்தம் இருந்தால்தான் பேசுவோன் கருத்தைக் கேட்போன் உணர்ந்து கொள்ள முடியும், எனவே பொருத்தம் இல்லாமல் வருவது என்பது பொருள் மாற்றம் பெற்று வருவதையே குறிப்பதாகக் கொள்ளலாம்.

இதற்கு ஏற்பவே மன் பற்றிய சூத்திரத்தில் (இடை. 4), பொருள்புணர் இடைச்சொல், பொருள்புணரா இடைச்சொல் என்று இரண்டு வகைப்படுத்தி மன் முதலியவற்றைப் பொருள் புணரா இடைச்சொல் என்று குறிப்பிட்டுள்ளார். இதனுடைய விளக்கத்தைப்பின்னால் பார்ப்போம்.

இடையியல் ஆறாம் சூத்திரத்திலேயே 'இம்மூன்று (மன், தின், கொள்) சொல்லும் பெயர், வினையை ஒட்டி வாராது தனிவந்து ஒப்பில் வழியால் பொருள் உணர்த்தினமையான் ஒப்பில் வழியாற் பொருள் செய்தன ; பிறவும் இவ்வாறு வருவன கொள்க'.

என்று விளக்கியுள்ளதால் தெய்வச்சிலையார் மன், தின், கொல் போன்றவற்றை 'ஒப்பில் வழியால் பொருள் செய்குந' என்று கொள்கிறார் என்று அறிய முடிகிறது.

இங்கு பெயர், 'வினையை ஒட்டி வராது தனியே வருவது' என்ன என்ற கேள்வி முதலில் எழுகிறது.

மொழியியலில் அண்மை உறுப்பு ஆய்வு நோக்கில் விளக்குவதே பொருத்தமாக இருக்கும் போலத் தோன்றுகிறது.

பல சொற்கள் ஒன்றையொன்று அடுத்து வந்தாலும் அண்மை உறுப்பு உறவு வேறுபடலாம். மேலும் சிலசொற்கள் தனக்கு முன்னுள்ள ஒரு சொல்லை மட்டும் தழுவாமல் முன்னுள்ள எல்லாச் சொற்களையும் தழுவி வரலாம். அந்த முறையில் மன், தில்லும் வருவன. ஆனால் 'கொன்'னை அப்படி சொல்ல முடியாது. இதையே சிவஞான முனிவர் சில இடைச்சொற்கள் புறத்து உறுப்பாயும் வேறுசில அகத்து உறுப்பாயும் வரும் என்று விளக்கியுள்ளார் (நன், 420 வரை).



இங்கு 'மன்' என்பது சொல்நிலையில் ஈயும் என்ற வினைச் சொல்லோடு சேர்ந்து வந்தாலும் பொருள் நிலையில் சிறியகட் பெறினே எமக்கு ஈயும் என்ற தொடரையே தழுவி வந்துள்ளது. தெய்வச்சிலையார் வார்த்தையில் சொன்னால் 'வினையை ஒட்டி வாராது தனியே வந்திருக்கிறது'. பெற்றாங்கு அறிகதில என்பதையும் இந்த முறையில் விளக்க வேண்டும்.



இங்கும் 'தில்' என்பது தனியே வந்ததாகக் கருதப்பட வேண்டும் ஆனால் 'கொன்' என்ற இடைச்சொல்லை அப்படிச் கொள்ள முடியாது.

கொன்னூர் என்பதில் ஊர் என்பதன் அடையாக கொன் வந்துள்ளது ; அதாவது பெயரை ஒட்டி வந்துள்ளதாகக் கொள்ள வேண்டும்.



கொன்னே கழிந்தன்று இளமை என்ற தொடரில் கொன்னே என்பது வினையை ஒட்டி வந்துள்ளது.

கொன்னே கழிந்தன்று இளமை



எனவே, தெய்வச் சிலையார் நேரடியாகக் குறிப்பிட்ட மூன்று இடைச்சொற்களுக்குள்ளே செயல்பாட்டில் வித்தியாசம் இருக்கிறது. மேலும் பொருள் நிலையிலும் கொன் என்பது அகராதிப் பொருள் உடையது என்றும் மன், தில் ஆகிய இரண்டும் இலக்கணப்பொருள் உடையவை என்றும் வேறுபாடு உடையவை. இலக்கணப்பொருள் உணர்த்தும் எல்லா விகுதி களையும் வருணனை நோக்கில் வேறு வேர்ப்பொருள் பெற்றுப் பின்னர் பொருள் மாற்றம் வந்தவை என்று கூறமுடியாது; எனவே மன், தில் ஆகியவைகளை ஒப்பில் வழியால் பொருள் செய்வன என்று கூறமுடியாது. அப்படியே அகராதிப்பொருள் உடைய ‘கொன்’ என்பது அந்தப் பிரிவில் சேர்க்க முடியாது. எனவே, ‘ஒப்பில் வழியால் பொருள் செய்குந’ என்பதற்கு தெய்வச் சிலையார் கருத்து பொருந்தாது போய்விடுகிறது.

5. முடிவுரை :

முடிவாக இளம்பூரணர் கருத்தும் சேனாவரையர் கருத்தும் பொருந்துவதோடு ஏற்று அந்தில் போன்றவற்றையும் சேர்த்து பொது நிலையில் வேர்ப்பொருளை இழந்து, இலக்கண மாற்றம் பெற்று விகுதிபோல இலக்கணப் பொருளில் வருபவை களை ‘ஒப்பில் வழியாற் பொருள் செய்குந’ வாகக் கொள்ளலாம்.

துணை நூல்கள் :

ஆண்டியப்பன், தே. 1977 காப்பியர் நெறி : சொல்லியல், மதுரை.

ஆதித்தர், சு. கு. 1977 தொல். சொல். ஆதித்யம், சென்னை.

இசரயேல், மோ. 1977 The treatment of Morphology in Tolkappiyam, Madurai.

,, 1977 இடையும் உரியும், மதுரை.

சிவலிங்கனார், ஆ. 1986 தொல். உரைவளம். சொல். இடையியல், சென்னை.

சுந்தரமூர்த்தி, கு. (பதிப்பு) 1963 தொல். சொல். தெய்வச் சிலையார் உரை, சென்னை.

சுப்பிரமணிய சாஸ்திரி, பி. சா (மொ. ப.) 1945 Tolka:ppipam Collatikaram 2nd edition, 1979, Annamalainagar.

செயராமன், ந வீ. 1977 இடைச்சொல் பற்றித் தொல்காப்பியர்—தொல்காப்பிய மொழியியல் ப. 251 — 66, அண்ணாமலைநகர்.

நடராசன், தி 1977 The language of Sangam Literature and Tolkappiyam, Madurai.

வெள்ளைவாரணனார், க. 1971 தொல்காப்பியம் — நன்னூல் சொல்லதிகாரம், சிதம்பரம்.

படிப்பவர் மனதில் காட்சியும் பதிவதில்லை. அவன் படைப்பும் நிலைப்பதில்லை. "அனுபவங்கள் கலைஞனைப் பாதிப்பது போலவே, கலை ஆளுமையால் அனுபவங்களும் பாதிக்கப் பட்டே கலை வெளிப்பாடு நிகழ்கிறது. கலைப் பார்வைக்கு அநுபவம் உள்ளாவதே கலை. கலைஞன் கண்ணாடி அல்ல எனில் கலை இல்லை; கண்ணாடி மட்டும் தான் எனில் அப்போதும் கலை இல்லை. அனுபவங்கள், கலைஞனின் ஆளுமையால் பாதிக்கப்படும்போது அந்த ஆளுமையின் தன்மைக் கேற்பத் தளமாற்றங்கள் நிகழ்கின்றன என்பர். (சுந்தர ராமசாமி கட்டுரைகள். ப. 131) இக்கருத்திற்கேற்ப செயபாலனின் இயற்கை ஓவியங்கள் படிப்பவர் நெஞ்சில் நீங்கா இடம் பெறுகின்றன.

"கோடைச் சூரியன் சூடு போட்டதில்
இயல்பிழந்த செம்மண் பூமி
பெருமூச்சில் வெடித்தது
தாயின் கறுத்த முலைக் காம்புகளாய்
மேகம் குளிர்ந்து தாழப் பறந்தது
வெண்மணல் தூசுப் போர்வையுள்ள காய்ந்த
நாணல் மீது
இறகும் எலும்புமாய் மீன் கொத்திகள் பாடும்"

(நமக்கென்றொரு புல்வெளி ப. 68.)

என்று காட்சியைக் கண்முன் நிறுத்தி நிகழ்ச்சியையும் விவரித்துச் செல்கிறார். இது இவரது சிறப்பான கதை கூறும் கவிதை உத்தி ஆகும்.

பாலி ஆறு நடந்து செல்லும் காட்சி கவிஞரால் சிறப்பாக வருணிக்கப்படுகிறது. ஏழ்மைப்பட்ட நிலக்கிழான் போல் குலத் தெரு வீதியில் கூனிக்குறுகிக் கூசி நடந்து செல்வதைப்போல் பாலி ஆறு நடந்து செல்வதாகக் குறிப்பிடுகிறார். ஆறு நடந்து செல்லும் போதே சமூகப் போக்கையும் உணர்த்திச் செல்கிறது. இதுதான் இவரது கவிதையைப் பலமிக்கதாக மாற்றியமைக்கிறது.

"ஒப்பாரி வைக்கும் மீன்களை அதட்டி
முட்டை தம்மை மணலுள் புதைத்துச்
சேற்றுள் தலைமறை வாகி
வாழ்வுக்காகப் போரிடச் சொன்னது"

(ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும். ப. 18)

என்கிற போது கவிதையின் தலையாய பணியும் நிறைவேறி யிருக்கிறது.

ரதியின் கதையை மருத மரங்களும், பாலி ஆறும், நாணல் புதர்களும், மீன் இனங்களும் ஆர்வமாய்க் கேட்டன. அப்போது மீன்கள் மரங்களின் மீது சாற்றும் குற்றச்சாட்டு நாம் சிந்தித்துப் பார்க்க முடியாத குற்றச்சாட்டாகும். குற்றச்சாட்டில் கவிதையைப் படிக்கும் வாசகன் தூக்கத்தில் இருந்தவன் அதிர்ச்சியில் எழுந்து உட்காருபவனைப் போல ஓர் உணர்ச்சியை அடைகிறான்.

“ மரங்களுக்கு ஏது கதை
வேரினால் கட்டிப் போட்ட
சாபம் நிறைந்த அசடுகள்
சுதந்திரமான நமக்கு அல்லவா
கதையும் வாழ்வும்
வரால்மீன் மீண்டும் துள்ளும்
வரால் மீனுக்குள்ளோர்
வன்மம் இருந்தது ”

(ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும், பக் 31,32)

என்ற கவிதை வாழ்க்கையைப் பற்றியும் நடப்புச் சமூக மாந்தர் களைப் பற்றியும் ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுகிறது. வரால் மீனின் பேச்சைக் கேட்ட மருதிரை மரம் வேரில்லாத கீழ்ச் சாதிக்கு வாய்க்கொழுப்பு என்று பேசுகிறது. மீண்டும் கவிதையைப் படிப்பவர்கள் ஐம்புலனையும் அடக்க கவிதை அடுத்து என்ன சொல்லப் போகிறதோ என்ற எதிர்பார்ப்புடன் படிக்க முயலுகின்றனர். இவ்வாறு இயற்கையைக் காட்சிப் படுத்துவதிலும் கருத்தைப் பதிப்பதிலும் கவிஞர் தனித்திறனோடு திகழ்வதோடு நடைமுறை முரணையும் தெளிவுபடுத்தி உள்ளார்.

வாழ்வும் காதலும் :

மண்ணை இழந்து வாழ்வு உரிமையை இழந்து நகரும் நாளிலும் காதல், வாழ்வை பொருள்மிக்கதாக்க உந்தித் தள்ளு கிறது. காதலன் காதலியோடு இருக்கும்பொழுதில் வாழ்வின் மதிப்புணர்கிறான். அதனால் கட்டிலை நீத்து வாழ்வுக்காகப் போராடுகிறான்.

“ சிறுவன் ஊதும் சவுக்காரக் குமிழி போல
எத்தனை அழகு எங்களின் இருப்பு
... ...

சுதந்திரமாகக் காட்டுப்புறத்தில்
கனிகள் தேடும் புறாக்களைப் போலவும்
கடற்கரை மணலில்
சிப்பிகள் தேடும் குழந்தைகள் போலவும்
காலம் கழித்தவே வாழ்வு ''

[நமக்கென்றொரு புல்வெளி. ப. 69.]

என்று அடிமை வாழ்வுக்கு வாழ்வின் வழியாகவும் குரல் கொடுத்திருக்கிறார் கவிஞர்.

மனித உறவுகள் :

விடுதலைக்காகப் புரட்சியும், போரும் வரவேற்கக் கூடியது என்றாலும், அவற்றில் ஏற்படும் இழப்புக்களும், அவலங்களும் மனித மனத்தை வெகுவாகப் பாதிக்கக் கூடியவையே. மரணம் கொடியது. ஆனால் வாழ்வுக்காக மரணம் என்கின்ற நிலையில் வாழ்வை விட மரணமே நேசிக்கக் கூடியதாக இருக்கிறது. தாயின் அன்பையும் புறக்கணித்து வாழ்வின் இருப்புக்காகப் போராடும் பெண் தாய்க்குக் கடிதம் எழுதுகிறாள். அம்மா உன் கண்ணீரை விடவும் பலமிக்கது என் தோழரின் இரத்தம் என்கிறாள்.

'' இன்று வேண்டுவதெல்லாம் ஊரின் கொடுமை
இன்று வேண்டுவதெல்லாம் எனக்கோர் ஆயுதம்
உன் கண்ணீரை விடவும் துடித்தது அம்மா
தோழரின் இரத்தம் ''

(நமக்கென்றொரு புல்வெளி. ப. 67)

என்ற கவிதை தாய் மகள் உறவில் புதிய அத்தியாயமாய் வளர்ச்சி பெறுகிறது.

அம்மாவுக்கு மகள் கடிதம் எழுதினாலும், மகன் கடிதம் எழுதினாலும் செய்தி என்பது போரைப் பற்றியும், மரணத்தைப் பற்றியதாகவுமே இருக்கிறது. ஏனெனில் வாழ்நிலை அப்படி. யாழ்ப்பாணத்தில் நான் இல்லை என்பதால் மகிழ்ச்சியடையும் என் தாயே என் இறப்பு பெஞ்சமின் மொலாய்ஸ் இறப்பைப்போல இருக்க வேண்டும். பெஞ்சமின் தாய் விடுதலை கீதம் இசைத்தது போல நீயும் ஈழத்து மண்ணில் இசைத்திட வேண்டும் அம்மா என்று வேண்டுகிறான்.

யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் :

இன்று ஈழ விடுதலையைப் பெற்றே தீருவது என்று போராடும் தமிழர்களுள் யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். ஈழ வரலாற்றில் இவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட இடமும் உண்டு. ஆனால் யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் பிறபகுதித் தமிழ் இன மக்களைத் தமக்குச் சமமாக மதிப்பதில்லை என்ற நிலை இன்று வரை தொடர்ந்து இருந்து வருகிறது. யாழ்ப்பாணத்துத் தமிழர்களின் இம்மேலாதிக்கப் போக்கையும் கவிஞர் கண்டிக்கிறார்.

" சூரியனல்ல
தானே பிரபஞ்சத்தின் மையமென் றெண்ணும்
யாழ்ப்பாணத்து மேல்குடி பற்றி
நாணல் புதல்கள் கிசுகிசுத்தன "

(ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும். ப. 58)

என்று நாணலின் கருத்தாய் வெளிப்படுத்தியுள்ளார். மேலும் யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் பிற பகுதித் தமிழர்களைச் சுரண்டும் நிலையினையும் நன்கு அம்பலப்படுத்தியுள்ளார். ஒடுக்குமுறையும் சுரண்டலும் எந்த வடிவத்தில் வந்தாலும் கண்டிக்கத் தக்கதே. ஒடுக்குவதும் சுரண்டுவதும் யாழ்ப்பாணத்துத் தமிழன் என்பதால் ஏற்றுக் கொள்ள முடியாது என்ற கவிஞரின் கருத்து அவரின் நேர்மை உள்ளத்தையும் உணர்ச்சியில் உண்மையைக் காவு கொடுக்காத் தன்மையையும் விளக்கி நிற்கிறது.

ஈழமும் தமிழகமும் :

தமிழ் ஈழ விடுதலை என்பது அம்மண்ணின் மக்களின் தீர்ப்பு. ஆனால் இன்று ஒரு நாட்டின் விடுதலை என்பது அந்நாட்டிற்குள்ளே முடிந்துவிடும் நிகழ்ச்சியாக இல்லை. விடுதலைக்காக பிற நாடுகளிடம் இருந்து உதவியையும் ஆதரவையும் பெறவேண்டியிருக்கிறது. இந்நிலையில் ஒரு நாட்டின் விடுதலையில் பிற நாட்டார் வெளிப்படையாகவோ உள் முகமாகவோ தொடர்பு பட்டு நிற்கின்றனர். இத்தலையீடு சில நேரங்களில் விடுதலையைப் பின்னடையச் செய்யவும் கூடும். இதற்குக் காரணங்கள் பல. காரணங்களை இங்கு ஆய்தல் நம் நோக்கம் அன்று, ஈழ விடுதலையில் தமிழகத் தலையீடு எப்படி பேசப் பெறுகிறது என்பதைச் சுட்டுதலே இங்கு நோக்கம்.

வ. ஐ. ச. ஜெயபாலன் கவிதைகளில் கூட்டுக் குரல்.

தெ. திருஞானமூர்த்தி,
விரிவுரையாளர், தமிழ்த்துறை
க. செ. கல்லூரி,
மேலச்சிவபுரி.

தமிழ்க் கவிதைகளை ஆராயப்புகும் பலரும் ஈழத்துக் கவிதைகளை கருத்தில் கொள்வதில்லை. நவீன தமிழ் இலக்கியத்தில் ஈழத்தின் இலக்கியப் பாதிப்பும், திறனாய்வுப் பாதிப்பும் மிகுதி. மேலும் புதுக்கவிதைகளில் தமிழ் நாட்டை நோக்க, ஈழத்தில் தரமான புதுக்கவிதைகள் வெளிவந்துள்ளன. ஆனால் அவை நம் ஆய்வாளர்களின் கவனத்திற்கு வராமை வருந்துதற்குரியதே. ஈழத்துக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்க இருவர் சேரன், ஜெயபாலன் ஆவர். ஜெயபாலனின் கவிதைப் பண்பை ஒரே கட்டுரையில் முழுமைபெற விளக்க இயலாது. சூரியனோடு பேசுதல், ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும், நமக்கென்றொரு புல்வெளி என்ற அவரின் மூன்று தொகுப்புக்களில் வெளிப்படும் கூட்டுக்குரலை மட்டும் இக்கட்டுரை ஆராய முற்படுகிறது. ஒரு படைப்பில் படைப்பாளனின் குரல் மட்டும் வெளிப்படுவதில்லை. அவன் சமுதாயத்தின் குரலையும் ஒலிக்க முற்படுகிறான். எனவே படைப்பாளனின் குரல் வழியே சமூகதான் அல்லது சமூகக் குரல் வெளிப்படுகிறது. இக்குரலையே இக்கட்டுரை கூட்டுக்குரல் எனக்குறிப்பிடுகிறது.

இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது தேச விடுதலை, சமூக விடுதலை என்ற இரண்டு இயக்கங்கள் செயல்பட்டது போலவே ஈழத்திலும் இரு முரண்பாடுகள் முன் வைக்கப் படுகின்றன. ஒன்று தேசிய இன விடுதலை, மற்றொன்று யாழ்ப்பாணத்தில் காணப்படும் சாதிய முரண்பாடு. சாதிய முரண்பாட்டைப் பேசுபவர்கள் தேசிய இன விடுதலையையும், தேசிய இன விடுதலைக்காகப் போராடுபவர்கள் சாதியையும் கருத்தில் கொள்ள மறுக்கின்றனர். ஈழ வரலாற்றுப் போக்கில் தேசிய இன விடுதலைப் போக்கும், சாதி எதிர்ப்புப்போக்கும் இணையா நிலையே காணப்படுகிறது. இந்நிலையில் செயபாலன் கவிதைகள் அனைத்து முரண்பாடுகளையும் தெளிவாக வெளியிடுவதோடு, தேசிய இன விடுதலையின் இன்றியமையாமையையும் வலியுறுத்துகின்றன.

என்னடா கவிஞா ? ''
[ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும் ப. 33]

என்ற ரதியின் பேச்சு பெண்களைப் பற்றிய சமூகக் கருத்தையும், என்னடா கவிஞா என்றபோது கவிஞனைப் பற்றி நம் மரபு ரீதியான மனக் கருத்தையும் தகர்த்தெறிகிறது. இது புதுக் கவிதை வரலாற்றில் உள்ளடக்க நோக்கில் ஏற்பட்ட குறிப்பிடத் தக்க மாற்றம் எனலாம்.

இயற்கை :

இயற்கை, பாரதிக்கு நாட்டுப்பற்றை ஊட்டவும், பாரதிதாசனுக்கு ரசிப்பதற்கும், சமூக அவலங்களைப் பாடுவதற்கும் தளமாய் அமைந்தது. செயபாலனின் இயற்கைப் பாடல்கள், ஒரு வேறுபாடான குழலில் வெளிவருவதால் சோகமும், வீரமும், சமூக அவலமும் கலந்து வெளிவருகின்றன.

'' மன்னும் இமயமலை எங்கள் மலையே ''

என்று உரிமைக் குரல் கொடுத்தான் பாரதி. இழந்த புல்வெளிக்கு செயபாலன் ஆழமாக உரிமை கோருகிறார். ஆனால் அது சோகம் தொனிக்க வெளிப்படுகிறது. இவ்வாறு ஒலிப்பதனால் தான் செயபாலன் கவிதைகள் நடைமுறைப் பண்பை இழக்காமலிருக்கின்றன.

'' என்னை இருள் என்ன செய்யும் ?
தொட்டிலும் குழந்தையும் அன்றோ
இப்புல்வெளியும் எனது ஆளுமையும் ''
ஆயிரம் கோடைக்குச் சவால்விட்ட புல்வெளி
அந்த ஆயிரம் தடவையும் வசந்தத்தை மீட்டுக்
காதற் பூக்களைச் சூடிய புல்வெளி ''

(நமக்கென்றொரு புல்வெளி ப. 86)

இந்த மண் நமதுடைமை என்பதோடு மண்ணின் பெருமையையும் பேசி இன்று நம் புல்வெளி என்று முழங்கினர் என்கிறார். இவ்வாறு இயற்கையைப் பாடுவதால், அது ஈழவிடுதலைக்கும் அடிப்படையாய் அமைகிறது.

கண்முன் காணும் காட்சிகளைக் கவிஞன், தன் சிந்தனைக் களத்தில் இட்டுச் செறிவுபடுத்தி எக்காலும் இறவாச் சித்திரமாகப் புடைத்தளிக்கிறான், அவனது இப்படைப்பு முயற்சி இல்லையேல்

ரதி போராளிகளிடம் தம்பி நீங்கள் ஒற்றுமைப்பட்டால் உயிரும் தருவர் எமது மக்கள். ஏன் உட்கொலைகள் என்று கேட்கிறாள். அதற்குப் போராளி கூறும் பதில் பிளவுக்குக் காரணம் நாங்கள் அல்ல தமிழகத் தலைவர்களே என்பதை விளக்கி நிற்கிறது.

"ஒற்றுமைதான் எம் உயிர் மூச்சுக்கா
தமிழகத்திருக்கும் தலைவர்கள் அதை
உணர்கிறாரில்லை, நாம் என் செய்வோம்

(ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும். ப. 135)

என்ற போராளியின் ஆதங்கமாய் கவிஞர் இதனை வெளிப்படுத்தியுள்ளார்.

போராளிக் குழுக்கள் :

ஈழப்போராட்டம் பின்னடைவதற்குப் போராளிக் குழுக்களிடையே காணும் பிளவும் ஒரு காரணம் ஆகும். எதிரியை அழிக்க வேண்டிய போராளிக் குழுக்கள். தங்களுக்குள் மோதிக் கொள்வதும் ஒரு மோசமான நிலையாகும். பல்வேறு போராளிக் குழுக்களும் மக்களிடம் சென்று கட்டாய நிதி திரட்டுவதால் மக்கள் எல்லோருக்கும் நிதியளிக்க வேண்டிய நிலைமை; இவற்றுக்கும் மேலாக சிங்கள ராணுவத்தின் வெறியாட்டம். இவ்வெல்லாக் கொடுமைகளையும் அனுபவித்த ஊர்ப்பெரியவர் சோமசுந்தரம் பேசுவது ஈழத்தின் உண்மை நிலையை விளக்கும்.

"நாங்கள் மக்கள்
எங்களுக்குத்தான் எதுவுமில்லையே
இளைஞர்கள் நீங்கள் ஆயுதம் தரித்தீர்
வலது காலால்
எங்கள் எதிரிகளை உதைத்தீர் என்பதனாலே
இடது காலால்
எங்களை மிதிக்க உரிமை தந்தது யார்"

(ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும், ப. 63)

என்ற பெரியவரின் கேள்வி யதார்த்தத்தைத் தெளிவுறுத்தும்.

கவிஞர் அடுத்துப் போராளியைச் சந்தித்து, நொடித்துப் போன, நம் பொருளாதாரத்தின் கால்களை ஒடிக்கும் கடையடைப்பு தேவைதானா? எனக் கேட்கிறார். அதற்குப்

போராளி சிங்கள ராணுவம் நேற்று எம் தோழர்கள் வந்த படகை கடலில் மூழ்கடித்தது. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே இன்று கடையடைப்பு நடத்துவதாகக் கூறுகிறார். தொடரும் போராளி யின் பதில் நடைமுறை அவலநிலையையும், அதனைத் தவிர்க்க முடியா நிலையினையும் விளக்கி நிற்கிறது.

> " போராடுகின்ற எங்கள் வாழ்வில்
> மரணம் மட்டுமே நிச்சயமானது
> வடக்கிலிருந்து கிழக்கு வரைக்கும்
> நீண்ட எம் ஈழ தேசத்து மண்ணில்
> தினம் தினம் எம்முள் ஒருவனை யேனும்
> விடுதலைக்காக களப்பலி தருகிறோம் "

(ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும், ப. 73.)

போராளியின் இப்பேச்சு விடுதலையின் விலை மதிக்க முடியாப் பண்பையும் விளக்கி நிற்கிறது.

ஈழத்தமிழரும் சிங்கள ராணுவமும் :

ஈழத்தமிழரின் பாதுகாப்பு இலங்கை ராணுவத்திடம் இருந்து மீட்டெடுக்கப்பட வேண்டிய அவசியத்தைக் கவிஞர் வரலாற்று ரீதியாக நன்கு பதிவு செய்துள்ளார். ஈழத் தமிழர் சிங்களர் போராட்டம் 1958 லே வெளிப்பட்டதை ரதியின் கூற்றாக வெளிப் படுத்தியுள்ளார். மேலும் நாவில் தமிழ் வழங்கியதாயின் தீயில் விசுக என்ற சிங்கள இனவெறிக் கும்பலின் கொலை வெறிச் செயலையும், அதனை இலங்கை அரசு சிங்கள மக்களின் எழுச்சி என்றதையும் கவிஞர் சுட்டியுள்ளார். தென்னை மரத்தில் புல்லுப் புடுங்கவே அரசும், படையும் சென்றதாக இலங்கை அரசு உறுதி மொழி கூறியது. இதனைத் தமிழ் இளைஞர்கள் ஏற்க மறுத்தனர். விளைவு ஈழவரலாற்றில் புரட்சிகரமான ஒரு புதிய போக்கு உத்வேகத்தோடு முளைவிடத் தொடங்கியது.

> " 1971 ல்
> பரம்பரைத் தலைவரின்
> செக்கு மாட்டுத் தடங்களை விலக்கி
> போர்க்குரல் எழுப்பினர் தமிழ் மாணவர்கள் "

(ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும், ப. 100)

என்ற தமிழர்களின் புதிய நிலைப்பாட்டையும் கவிஞர் விளக்கி யுள்ளார்.

சிங்கள ராணுவத்தின் கொடுமைக்கு ஆட்பட்ட பெண் ரதி, தனக்கு இழைக்கப்பட்ட கொடுமையைக் கூறுகிறாள். கவிஞர் ஈழத்தமிழ்ப் பெண்களின் இன்றைய வாழ்நிலையை யதார்த்தப் பண்புக்கு ஊறு நேரா வண்ணம் படம் பிடிக்கிறார்.

" ஜூலி எங்கே என்ற படிக்கென்
சட்டையைக் கிழித்து மார்பைத் திருகினான்
சிறிலங்க ராணுவ முகாம்களைத் தாக்க
திட்டம் போட்டதா என்ற படிக்கு
வேறு ஒருவன் போணியில் கடித்தான்
' கஸ்ரோ ' வுடைய வைப்பாட்டிக்கு
சேலை எதற்கென நிர்வாணப்படுத்தினர்
இராணுவத் தளபதி தன் சட்டையைக் கழற்றினான்
மூச்சுத் திணறினேன்
நினைவை இழந்தேன்

(ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும், பக்.142, 143.)

பெண்மை களங்கப்படுத்துவதைக்கூட கவிஞர் ஆபாசம் இன்றி மூச்சுத்திணறினேன் நினைவை இழந்தேன் என்று குறிப்பிடுகிறார். இது செயபாலனின் கவிதை வெளியீட்டுப் பண்பு எனலாம்.

தேசிய இன விடுதலை

தமிழ் ஈழத்தில் காணப்பெறும் பல்வேறு முரண்பாடுகளையும் செயபாலன் பாடியிருந்தாலும், அவரது குரலின் அழுத்தம் தேசிய இன விடுதலையில் தான் உரத்து ஒலிக்கிறது. " இலக்கியம் என்பது ஒட்டுமொத்தமான சமூகத்தின் வெளிப்பாடாக இருந்த போதிலும், ஒரு குறிப்பிட்ட படைப்பின் ஆக்கத்தில் அந்தக் குறிப்பிட்ட படைப்பாளியின் ஆளுமை மிக முக்கிய பங்கு வகிக்கிறது எனவே விருப்பப் பூர்வமான தேர்வை ஆளுமை மிக்க படைப்பாளி மேற்கொள்கிறான் என்பர். அ. மார்க்ஸ் (மேலும்-பிப்.-91-பக். 16) இக்கருத்திற்கேற்ப செயபாலன் சமூகக் குரலை பிரதிபலித்திருப்பதோடு, தன் நிலையையும் தெளிவு படுத்தியுள்ளார்.

" எங்கள் கிராமங்கள் மண்வளம் மிகுந்தவை
எதைப் புதைத்தாலும் தோப்பாய் நிறையும் "

என்று ' சூரியனோடு பேசுதல் ' தொகுப்பில் கூறும் செயபாலன் இன்று வரை அதே நிலைந்தாதப் போராடுகிறார்.

“ ஒரு பொழுதில் பேனா ஒரு பொழுதில் யாழ்
ஒரு பொழுதில் பதாகை மற்றொரு பொழுதில்
போர்வாள் என்று

ஈழ நாட்டிலும் இலங்கைத் தீவிலும்
உலகப் பந்தின் ஒவ்வோர் புறத்திலும்
மானிடம் முன் செல்லும்
மனம் தளராதீர் ” (ப. 144)

என்பதையே ‘ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்’ என்ற நெடுங்கவிதையும் பேசுகிறது.

இறுதியாக வந்த ‘நமக்கென்றொரு புல்வெளி’ கவிதைத் தொகுப்பில்நிச்சயமற்றஇருப்பை நிச்சயப்படுத்தப் போராடுவதைத் தவிர வேறு வழி இல்லை என்கிறார்.

“ ஓயாது துரத்தும் சவக்குழி விழுங்கு முன்
ஒரே ஒரு முறையே வாழுமிவ் வாழ்வில்
கையாலாகாத கோழையைப் போல
கொடுமையும் சூதும் நிறைந்த உலகைச்
சகித்தும்
ரசிக்கும் பாவனை செய்தும்
சான்றோன் என்று மாலைகள் சூட
நானும் எனது நண்பரும் விரும்போம் ” (ப. 41)

இதுதான் இன்றைய நடைமுறையாக இருக்கிறது

ஈழத்தமிழர்களின் போராட்டம் தவிர்க்கமுடியாத உரிமைப் போராட்டமும், வரலாற்று நிகழ்வும் ஆகும் என்பது கவிஞர் கருத்தாகும். இதனைக் கவிஞரின் பின்வரும் வரிகள் விளக்கும்.

“ எமது இருப்பை
உயர்ந்தபட்சம் உறுதிசெய்யும்
சமூக புவியியல் தொகுதியே தேசம்
எங்கள் இருப்பை உறுதி செய்திடும்
அடிப்படை அவாவே தேசப்பற்று
நாடுகள் என்று இணைதலும் பிரிதலும்
சுதந்திரமாக
மானிட இருப்பை உறுதி செய்திடவே ”
(சூரியனோடு பேசுதல், பக்-28, 29)

இவை தவிர, தமிழர் தமிழ் முஸ்லீம் இடையே காணும் முரண்பாட்டையும் கவிஞர் விளக்கியுள்ளார்,

செயபாலனின் கவிதையில் ஒரு மையம் இல்லை. ஆனால் பல மையங்கள் உண்டு. தமிழ் நாட்டுக்கு மகாகவி இல்லை, என்ற வசை என்னால் தீர்ந்ததன்றே என்ற பாரதியின் நானைப் போல் இவர் நான் இல்லை. சிதைவடைந்த நானாக உள்ளது. "வாழ்வின் குரலை வாழ்வுக்காக, வாழ்வால் நமது கலைஞர்கள் எழுப்புகின்றனர். நானும் அவர்களின் ஒருவன். நான் அவர்களுள் ஒருவன் மட்டுமே என்றும் எதிர்காலத்தை நமக்குவென்று தருவதற்காகத் தம்மைப் பலிகொடுத்த பல்வேறு விடுதலை இயக்கங்களைச் சார்ந்த போராளிகளுக்கும், புறத்திருந்து போராடிய மக்களுக்கும் முன் நான் மிகவும் சிறிய மனிதன் என்பதை உணர்கிறேன்" என்ற செயபாலனின் கூற்றே இதனைத் தெளிவுபடுத்தும்.

செயபாலனின் கவிதைகள் புதுக்கவிதைக்கு இலக்கியத் தரத்தைத் தரும் தகுதியை உடையன. ஒரு மகாகவிக்கான விரிந்த இலக்கியப் பார்வையும், ஆழ்ந்த நோக்கும், வடிவச் செழுமையும் இவரது படைப்புக்களில் காணலாம்.

திருக்குறள் கூறும் செய்ந்நன்றி அறிதல் — ஓர் ஆய்வு III

ஆ. இரத்தினம்,
2, வேலுநகர்,
திருவண்ணாமலை - 606 602.

ஆய்வுச்சிக்கல் :

13. இரண்டாம் பகுதியில் "அறம்" என்னும் நூலைச் சுட்டும் புறப்பாடல் 34க்குக் குறள் முந்தியது என்று பார்த்தோம். குறள் முந்தியது என்றாலும் புறம் சுட்டும் 'அறம்' குறளாகவும் இருக்கலாம், வேறு நூலாகவும் இருக்கலாம். எனவே புறம் சுட்டும் 'அறம்' எந்நூலைக் குறிக்கிறது என்பதை ஆராய்வோம்.

மனு தரும நூலா ?

14. "புறநானூற்றுப் பாடல் (34) சில பெரும்பாவங்களைச் சுட்டி அவற்றிற்குக் கழுவாய் உண்டு; ஒருவன் செய்த நன்றியை மறந்தால் அதற்குக் கழுவாய் இல்லை என்று அறம் பாடிற்று எனக் கூறுவதால், இவை, இவை பாவங்கள், இவை, இவை அவற்றிற்குக் கழுவாய்கள் என்று கூறும் மனு தரும நூலையே ஆலத்தூர் கிழார் குறிப்பிடும் அறம் என்பது சுட்டும்" [40] என்று டாக்டர் ப. அருணாசலம் கூறுவதை எடுத்துக்காட்டி டாக்டர் கொ. இலக்குமணசாமி,

> "சிசுஉறத்தி ஸ்த்ரீஉறத்தி செய்தவன் நன்றி
> கெட்டவன் சரணம்
> அடைந்தவனைக் கொன்றவன், இவர்கள் விதிப்படி
> பிராயச்சித்தம்
> செய்துகொண்டாலும் அவர்களோடு சகவாசம்
> செய்யக் கூடாது"

என்று மனுதரும சாத்திரம் (அத்தியாயம் 11 : 190) நன்றி கெட்டவனுக்கு விதிப்படி பிராயச்சித்தம் உண்டு என்று கூறுவதால், பிராயச்சித்தம் இல்லை என்கிற (புறம் 34 சுட்டும்) 'அறம்' மனுதரும நூலைக் குறிக்காது என மறுக்கிறார். [41] எனவே ஆலத்தூர் கிழார் புறம் 34 இல் 'அறம்' என்பதனால் சுட்டுவது மனுதரும நூலில்லை என்பது தெளிவு.

அறங்கூறவை நூல் :

15. சங்ககாலத்தில் மக்களிடையே தோன்றும் வழக்குகளை ஆய்ந்து தீர்ப்புக்கூற ஊர்தோறும் சான்றோர்களைக் கொண்ட குழு இருந்தது. அதற்கு அறங்கூறவை என்று பெயர். " ஆலத்தூர் கிழார் புறம் 34-இல் சுட்டும் அறம் என்பது தமிழ் மக்களிடையே தோன்றி வளர்ந்த ஓர் அறநூல். அது அறங்கூறவையத்தார்க்கு வழிகாட்டும் நூலாயிருந்தது "[42] என்று டாக்டர் கொ. இலக்குமணசாமி முடிவு காண்கிறார்.

பிராயச்சித்தத்தைக் கூறுமா?

15.1. ஆலத்தூர் கிழார் பசுக்கொலை, பெண்கொலை, பார்ப்பார் கொலை ஆகியவற்றிற்குப் பிராய்ச்சித்தம் உண்டு என்றும், ஆனால் செய்ந்நன்றி கொன்றவர்க்குப் பிராய்ச்சித்தம் இல்லை என்றும் அறம் என்னும் நூல் உரைப்பதாகக் கூறுகிறார். எனவே ஆலததூர் கிழார் சுட்டும் அறம் என்னும் நூல் பிராயச்சித்தத்தைக் கூறுகிறது. அறங்கூறு வையத்தார்க்கு வழி காட்டியாக இருக்கும்நூல் பிராய்ச்சித்தத்தைக் கூறுமா என்பதே நம்கேள்வி.

15. 2. பிராயச்சித்தம் என்பது தீச்செயல் செய்தவன் தான் இன்ன பாவத்தைச் செய்து விட்டோமே என்று வருந்தி, அப் பாவத்திற்கு ஈடுகட்டப் பிறர்க்குத் தன் பொருளைக் கொடுப்பது, அல்லது துன்பத்தை ஏற்றுக் கொள்வது. அது விரும்பிச் செய்யப் படுவது. பிறர் வற்புறுத்தலினால் செய்யப்படுவதன்று. அறங் கூறவையத்தவர் பிராயச்சித்தத்தைச் செய்து கொள் என்று வற்புறுத்த முடியாது. அவர்கள் வழக்கை ஆய்ந்து குற்றத்திற்கு ஏற்பத் தண்டனைதான் வழங்கமுடியும். எனவே அவர்களுக்கு வழிகாட்டும் நூல் இன்ன இன்ன குற்றத்திற்கு இன்ன இன்ன தண்டனை என்று தண்டனையைத்தான் கூறும் ; பிராய்ச் சித்தத்தைக் கூறாது ; கூறவேண்டிய அவசியமும் இல்லை. இன்னொன்றும் இங்குச் சிந்திக்கத் தக்கது. பசுக்கொலை, பெண் கொலை, பார்ப்பார்க் கொலை செய்தவனைப் பிராயச் சித்தம் செய்துகொள் என்று கூறிவிட்டு விடுமாறு அறங்கூற வையத்தார் நூல் செல்லுமா ? சொன்னால் நாடு என்ன ஆகும் ? எனவே ஆலத்தூர் கிழார் சுட்டும் பிராயச்சித்தத்தைக் கூறும் அறம் என்னும் நூல். அறங்கூறவையத்தார்க்கு வழிகாட்டும் நூலாக இருந்திருக்க முடியாது.

' அறம் என்னும் நூல் இருந்தது ?

16. 0. " "அறம்" என்னும் பெயரில் ஒரு நூல் இருந்து அது மறைந்தது என்பதற்குப் பின்வரும் பழம்பாடல் ஒன்று அசைக்க வொண்ணாப் பெரும் சான்றாக உள்ளது." [43] என்று கூறுகிறார், டாக்டர் கு. மோகனராசு.

" ஏரணம் உருவம் யோகம்
இசைக்கணக் கிரதம் சாலம்
தாரணம் அறமே சந்தம்
தம்பநீர் நிலமு லோகம்
மாரணம் பொருள்என் றின்ன
மானநூல் யாவும் வாரி
வாரணம் கொண்ட தந்தோ
வழிவழிப் பெயரும் மாள."

நம்பகத்தன்மை :

16. 1. அறம் என்னும் பெயரில் ஒருநூல் இருந்தது என்பதைத் தமிழிலிருந்த நூல்களின் பட்டியலைத்தரும் களவியல் உரை குறிப்பிடவில்லை. உரையாசிரியர்கள் எவரும் சுட்டவில்லை. மேல் குறித்த பாடல் எக்காலத்தது ? ஆக்கியோர் யார் ? அது எங்கிருந்து கிடைத்தது என்பதைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. இங்ஙனம் நம்பகத்தன்மை (Trustworthiness) இல்லாத ஊர் பேர் தெரியாத பாடலை ஆதாரமாகக் கொண்டு ஒன்றை மறுப்பது அல்லது ஒன்றை நிறுவுவது ஆய்வுக்குப் பொருந்துமா என்பது ஒருபுறம் இருக்கட்டும்.

அறம் என்னும் பெயருடைய நூலைக் குறிக்கிறதா ?

16. 2. இப்பாடலை ஒரு முறை படித்தாலே அறம் என்னும் நூல் இருந்ததாக இப்பாடல் வெளிப்படுத்தவில்லை என்பது விளங்கும். இப்பாடலின் பொருள் வருமாறு :

ஏரணம்	—	தருக்கநூல்
உருவம்	—	விக்கிரக நூல்
யோகம்	—	யோக நூல்
இசை	—	இசை நூல்
கணக்கு	—	கணித நூல்
இரதம்	—	சுவை (மெய்ப்பாடு) நூல்

(தொடரும்)

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ.	100	00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ.	30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ.	6	00
கபிலர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	4	00
நக்கீரர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2	00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0	75

பிற வெளியீடுகள்

தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை

எழுத்ததிகாரம்	ரூ.	40	00
சொல்லதிகாரம்	ரூ.	45	00
கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]	ரூ.	7	50
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ.	4	50

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

Regd. No. TN/TJ/24

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு நூலகர் அவர்கள்

மறைமலைக் கீழ்த்திசைச் சுவடி

நூலகம்

சென்னை

600005

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுவோர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்., கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி, ஜெமினி அச்சகம், 1837 / 1, மேலராஜ வீதி, தஞ்சாவூர் - 613 009.